Registered at the G. P. O. as a Newspaper விலைசதம் 20

மில்க் வைற்
நீல சோப்

மேல் உறைகளைச் சேகரியுங்கள்
வழமைபோல்
50 மேல்உறைகளுக்கு
ஒரு அழகான சாக்குபை
இனமாகக் கொடுக்கப்படும்.

ஈழநாடு
வார மலர்.

தேசிய தினசரி — National Tamil Daily
மலர் 8 — இதழ் 186

பராபவ ஆடி 30 ரபி: ஆகி 27 (15-8-66) திங்கட்கிழமை

பாலக்காடு
ஆர். வி. ஜி.
பீடிகளை உபயோகியுங்கள்
தயாரிப்பாளர்கள்:
வ. வ. இராமசாமிப்பிள்ளை
அன் சன்ஸ்,
47, பீச்ரோட், யாழ்ப்பாணம்.

# 'தேசிய ஐக்கியம் நீடிக்க வேண்டும்

## வைத்திலிங்கம் போன்றோர் நாட்டு முன்னேற்றத்துக்கு தேவை'

### யாழ்ப்பாணத்தில் மந்திரி குருள்ள பேச்சு

யாழ்ப்பாணம், திங்கள்

"1956-ம் ஆண்டுமட்டும் சிங்கள மக்கள் தமிழும், தமிழ் மக்கள் சிங்களமும் பேச அறிந்திருந்தார்கள். அந்த தேசிய ஒற்றுமை மீண்டும் இந்நாட்டில் மலர்ந்திருக்கிறது. அதே நிலை என்றும் நிலைத்திருக்குமென நம்புகிறேன்."

இலங்கை ரயில்வேயில் இருபத்து மூன்று வருடங்கள் என்ஜினியராக சேவை செய்த திரு. ந. ஆ. வைத்திலிங்கம் ஓய்வு பெறுவதை முன்னிட்டு அளிக்கப்பட்ட சேவை நலம் பாராட்டு விழாவில் போக்குவரத்து மந்திரி திரு. குருள்ள மேற்கண்டவாறு கூறினர்.

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திற்கு வெளியில், முத்துச் சப்பரத்தால் அலங்கரிக்கப்பட்ட பந்தலில் இவ் வைபவம் நடைபெற்றது. வட இலங்கைப் புகையிரதத் தொழிலாளர் நன்நோக்குச் சங்கத்தினல் அளிக்கப்பட்ட இப்பாராட்டு விழாவில் மந்திரி குருள்ள மேலும் கூறியதாவது:-

நான் புகையிரதப் பகுதி மந்திரியாகக் கடமையாற்றும் சமயத்தில் திரு. வைத்திலிங்கம் எனக்களித்த உதவியை என்றும் மறக்கமாட்

(12-ம் பக்கம் பார்க்க)

## சாதாரண உடையில்வந்து இராணுவத்தினர் தாக்கினர்

### தாளையடி தாக்குதல் வழக்கில் சாட்சியம்

சாவகச்சேரி, ஞாயிறு

1964-ம் ஆண்டு ஜுலை 5-ம் திகதி நான் வீட்டிலிருக்கும்போது ஒரு ராணுவ ஜீப் வீதி ஓரத்தில் நிறுத்தப்பட்டது. அதிலிருந்து 15, 20 ராணுவத்தினர் சாதாரண உடையில் வந்து என்னையும் எனது தந்தையையும் தாக்கினர்.

சாவகச்சேரிமாவட்ட நீதிமன்றத்தில் நீதியரசர் திரு. வி. எம். குமாரசாமி முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட தாளையடி ராணுவ தாக்குதல்வழக்கில் எம். பெனடிற் சாட்சியமளிக்கையில்மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கில் 1964-ம் ஆண்டு ஜுலை மாதம் 5-ம் திகதி தாளையடியில் சட்டவிரோதமாகக்கூட்டம் கூடி, சிலருக்கு அடிதுக்காயம் விளைவித்ததாகவும் வீட்டுக்குத் தீமூட்டி உடைமைகளைச் சேதப்படுத்தி ஐயாயிரம் ரூபாவுக்கு நஷ்டம் விளைவித்ததாகவும் குற்றம் சாட்டி ராணுவ வீரர்களாகிய டபிள்யு.என். கருணாரத்தின, ஜே. எம். பசநாயக்கா, எஸ், ஏ. டீ. சில்வா ரீ. எவ். சி. டீன் ஆகிய நால்வர் மீதும் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் கே. வி. எஸ். சண்முகநாதன் புறக்டர் கே. பாலகிருஷ்ணனின் உதவியுடன் ஆஜராஞர்.

பெனடிற் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

'இவர்கள் வருவார்கள் எனத் தெரியாததால் நான் தயாராக இருக்கவில்லை. இவர்கள் தாக்கியதும் பின் பொலிசாரால் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டோம். பின்பு 1964-ம் ஆண்டு ஜுலை மாதம் 7-ம் திகதி இயக்கச்சி ராணுவ முகாமில் நடைபெற்ற அணிவகுப்பில் எதிரிகள் நால்வரையும் அடையாளம் காட்டினேன்.'

## யாழ்ப்பாணத்தில் "பாச நிலா"

யாழ்ப்பாணம், திங்

யாழ்ப்பாணத்தில் தயாரான முதல் தமிழ்ப்படமான "பாச நிலா" இன்று யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் திரையிடப்படுகிறது. நீதியரசர் திரு. பி. ஸ்ரீஸ்கந்தராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

மாணவர்கள், ஆசிரியர்களின் முயற்சியினுல்உருவான இப்படம் அரைப் பங்குக்கு வர்ணமாக விருக்கிறது. கதையை எழுதிய தேவ் அன் தேவ் இரட்டையரே, ஒலி, ஒளியையும் பாடல்களையும் இசையையும் கவனித்துள்ளனர். இப் படம் 19-ம் திகதி வரை இங்கு காண்பிக்கப்படும்.

## பாக். சுதந்திரதினம்

ராவல்பிண்டி, [illegible]

பாகிஸ்தான் இன்று [illegible] சுதந்திர தினத்தைக்கொண்டாடியது.

## தமிழரசு வாலிபமுன்னணி மகாநாடுஏற்பாடுகள்

யாழ்ப்பாணம், திங்கள்

மாவிட்டபுரத்தில் இம்மாதம் 21ம், 22ம், 23ம் தேதிகளில் நடைபெறவிருக்கும் தமிழரசுக்கட்சி வாலிப முன்னணியின் 11ம் மாநில மகாநாட்டுக்கான வேலைகள் துரிதமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. நேற்று மாவிட்டபுரத்தில் மகாநாட்டிற்கு பணியகம் ஒன்று திறந்துவைக்கப்பட்டது. சில எம். பி. க்களும், செனட்டர்களும் நேற்று மாவிட்டபுரத்தில் வாலிப முன்னணியினருக்கு உதவி கொடுப்பதில் முனைந்திருந்தனர்.

மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக மலைநாட்டிலிருந்தும், கிழக்கு மாகாணத்திலிருந்தும் வாலிபர் கோஷ்டி இம்மாதம் 18-ம் தேதி இங்கு வந்துசேரவிருக்கின்றன. இன்று வாலிப [illegible] எம். பி. யுமான திரு. செ. இராஜதுரை இங்கு வந்து சேருவார்.

## ஜி.ஜி.க்கு பிரதமர் அழைப்பு- 'தெற்குக்கு வருக'

கொழும்பு, ஞாயிறு

யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி ஜி பொன்னம்பலத்தைத்தென் பகுதிக்கு வரும்படி பிரதமர் டட்லி சேனநாயக்கா அழைப்பு ஒன்றை விடுத்துள்ளார்.

தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள் சார்புள்ள புதிதாக அமைக்கப்பட்ட தேசிய அரசாங்கச் சம்மேளனக் கூட்டமொன்றில் பேசுகையிலேயே பிரதமர் இந்த அழைப்பை விடுத்தார்.

"திரு. ஜி ஜி என்னை வட பகுதிக்கு அழைத்து இனிய உபசாரத்தை அளித்தார். நான் இப்போது அவரைத் தென்பகுதி சுற்றுப்பயணமொன்றுக்கு என்னுடன் வரும்படி அழைக்கிறேன்" என்று பிரதமர் கூறினர்

பிரதமர் டட்லி மேலும் பேசுகையில் கூறியதாவது!

சிங்களமக்கள் அன்புடனும், இன்முகத்துடனும் பொன்னம்பலத்தை வரவேற்பார்கள் என்பதில் எனக்கு எவ்வித சந்தேகமுமில்லை. திரு. ஜி. ஜி. தென் பகுதிக்கு விஜயம் செய்வதால் தேசிய அரசாங்கம் இனங்களிடையே நல்லெண்ணத்தையும், நல்லுறவையும் ஏற்படுத்த திவிட்ட தென்பதைக் காட்டமுடியும்.

## 'வகுப்புவாத பாதையிலிருந்து நாடு விலகி செல்கிறது'

### பிரதமர் பெருமிதம்

கொழும்பு, ஞாயிறு

வகுப்புவாதமும், பிற்போக்கும், நாகரீகமற்றதுமான ஒரு பாதையிலிருந்து முற்னேற்றகரமான ஒரு பாதையை நோக்கும் புதிய திருப்பமொன்று இப்போது ஏற்பட்டிருப்பதாக பிரதமர் டட்லி சேனநாயக்கா கொழும்பு தப்ரானிஹோட்டலில்நேற்று இரவு நடந்த விருந்தொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

போரா சமூகத்தினர் அளித்த விருந்தொன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறுபேசினர்.

பிரதமர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

### யாழ்ப்பாணவிஜயத்தில் மகிழ்ச்சி

நான் யாழ்ப்பாணத்துக்கு சென்று வந்ததையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். இந்த நாட்டில் வாழும் மக்கள் எந்த இனத்தவர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் ஐக்கியத்துடன், இணைந்தும் வாழ்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்

(12-ம் பக்கம்பார்க்க)

## தேர்தல் வழக்கில் ஸ்தானமிழந்த எம். பி.க்கள் அப்பீல் செய்யமுடியாது?

கொழும்பு, ஞாயிறு

தேர்தல் ஆட்சேப வழக்குகள் சம்பந்தமான சுப்ரீம் கோர்ட்டுகளில் தீர்ப்புகளுக்கு எதிராக பிரிவு கவுன்ஸிலுக்கு அப்பீல் செய்யும் உரிமை இருக்காது என அரசியல், சட்டத்துறை வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

தேர்தல்வழக்குகளில் சுப்ரீம கோர்டுகளின் தீர்ப்புக்கெதிரான அப்பீல்களைவிசாரணை செய்யமுடியாது எனவும் தீர்ப்புவழங்கிய நீதியரசர்க்கு எதிராகவழக்குதாக்கல் கியிருந்தால்கூட அவ்வித வழக்கை கூட விசாரணை செய்ய பிரிவு கவுன்ஸிலுக்கு சட்டபூர்வமான உரிமை கிடையாதுஎன ஏற்கெனவே தெரிவித்திருந்தபடியாலேயே இவர்கள் இவ்வித கருத்துக்கொண்டுள்ளார்கள்.

இதன்பிரகாரம் சுப்ரீம் கோர்ட்டில் நடைபெற்ற தேர்தல் வழக்குகளின் தீர்ப்பின்படி தமது ஸ்தானங்களை இழந்த எம். பி க்களுக்கு பிரிவு கவுன்ஸிலுக்கு அப்பீல் செய்யும் உரிமை இருக்கமாட்டாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரசாரம் அரசியல் நிருபர்

# பிரதமர் வருகை அளித்த பயன்



## ராஜாஜியை மேற்கோள் காட்டுவோர் அவர் செயலையும் பின்பற்றுவரா ?

வந்தார்-வென்ருர்-சென்ருர்.

சென்ற வாரம் யாழ்ப்பாணத்துக்கு வந்து திரும்பிய பிரதமர் டட்லி சேனநாயகாவின் விஜயத்தைஇப்படிச் சுருக்கமாகச் சொல்லலாம்.

பன்னிரண்டுவருடங்களின் பின் இந்த நாட்டின் பிரதமர் ஒருவர் இந்த நாட்டின் ஒருபகுதியான யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்ததும் அவருக்கு இப்பகுதி மக்கள் உற்சாகமாக, அன்பு கனிந்த வரவேற்பளித்ததும் யாழ்ப்பாணச் சரித்திரத்தில் மட்டுமல்ல இலங்கையின் சரித்திரத்திலுமே இடம் பெறவேண்டியது.

பிரதமரும் மற்றும்முக்கிய அமைச்சர்கள் சிலரும் ஓர் அரசியல்கட்சியின் மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருந்த போதிலும் இன, மத, அரசியல் வேறுபாடுகளின்றி மக்கள் அளித்த வரவேற்பு தேசிய ஐக்கியத்தில் இப்பகுதி மக்களுக்குள்ள விருப்பையும் பெரும்பான்மைச் சமூகத்தினருடன் நட்புறவுடன் வாழ இப்பகுதி மக்கள் கொண்டுள்ள ஆர்வத்தையும் தெளிவாகக்காட்டி விட்டது.

வடபகுதி மக்கள் பிரிவினை மனப்பான்மை கொண்டவர்களென்றும் தமிழரசுக் கட்சியைச்சேர்த்துக்கொண்டதால், நாட்டைப் பிரிக்க யு. என். பி. உடந்தையாக உள்ளதென்றும் எதிர்க்கட்சியினர் செய்து வந்த பிரசாரத்தையும் பிரதமரின் விஜயம் முறியடித்து விட்டது என்று சொல்லலாம்.

### சொல்லாதவர் சொல்லிவிட்டார்

அரசியல்வாதிகள் வாக்குறுதி அளிப்பதில் வீரர்கள். அதே போல் கொடுத்த வாக்குறுதியை மறந்து விடுவதிலும் சமர்த்தர்கள். அமைச்சர்கள், இப்பொழுது பதவியிலிருப்பவர்கள் சிலரும்கூட வாக்குறுதிகளை அள்ளி வீசுவதிலும் அவற்றை மறந்துவிடுவதிலும்சளைத்தவர்களல்லர்



இங்கு வந்த கல்வி அமைச்சர் பல்கலைக்கழகம் பற்றி வாக்குறுதி அளித்துவிட்டுச் சென்ருர். அதன் முடிவு அனைவரும் அறிந்ததே. அமைச்சர்கள் மட்டுமல்ல முன்பு பிரதம அமைச்சர்களாக இருந்தவர்களும் அரசியல்வாதிகளுக்குரிய, 'மண்ணைக் கயிருகத் திரிப்பேன் வானத்தை வில்லாக வளைப்பேன்' என்பது போன்ற 'உறுதிமொழிகளை' தங்களுக்கு அளிக்கப்படும் அமோக வரவேற்பில் மெய் மறந்து அளித்திருக்கின்றனர். அதனுல் ஏற்பட்ட விளைவுகளும் அனந்தம்.

பிரதமர் டட்லி சேனநாயக்கா இதற்கு விதிவிலக்கு. எத்தகைய வரவேற்பாக இருந்தாலும் தன்னை மறந்த நிலையில் எதையும் பேசமாட்டார். வார்த்தையை அளந்து நிதானமாகப் பேசுவார் 'ஜனநாயகம்' அல்லது 'தேசிய ஐக்கியம்' பற்றிப் பேசிச் சமாளித்துவிடுவார். யாழ்ப்பாணத்தில் பிரதமர் பேசுகையில் வடக்கு மாகாணத்துக்கு மகாவலிகங்கையைத் திருப்ப முயற்சி மேற்கொள்ளப்படுமென்று அவர் அளித்தவாக்குறுதி பாலைவனத்தில் தாகத்துடன் நிற்பவனுக்கு ஒரு பானை குளிர்ந்தஜலம் கிடைத்தது போன்றிருந்தது. யாழ்ப்பாணம் இன்னும் சில வருடங்களில் பாலைவனமாகிவிடும் என்ற அச்சம் நீங்கி, பசுஞ்சோலையாக அது இப்பொழுதே கண்ணுக்குத் தோற்றமளிக்கிறது. பிரதமர் வாக்குறுதியளிக்கமாட்டார். அளித்த வாக்குறுதியை மறந்துவிடமாட்டார்.

### ராஜாஜியும் சுவாமி தரிசனமும்

ராஜாஜி சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாகப் பதவி வகித்த காலம். ஒருசமயம் தென்னுட்டிலுள்ள ஒருபெரிய ஆலயத்துக்கு விஜயம் செய்தார். அங்கு நிகழ்ந்தவைபவத்தில் அவர் பேசினர் கவர்னர் ஜெனரல் என்ருல் பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு கேடகவாவேண்டும்? திரும்பிய இடமெல்லாம் பொலிசாரும், இரகசியப் பொலிசாரும் காட்சியளித்தனர். இதைப் பார்த்த ராஜாஜி, 'நான் இந்த ஆலயத்தினுள் நுழைந்தபோது எனது செருப்புகளை வெளியில் கழற்றி வைத்துவிட்டு நுழைந்தேன் அதேபோன்று எனது பதவியையும் வெளியே விட்டு வந்திருக்கிறேன்' என்ருர்.

### நல்லூரில் பிரதமரும் நாகநாதனும்

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா நல்லூர்க் கந்தனையும் தரிசனம் செய்யச்சென்ருர். ஆலயத்தினுள்ளே அவர்கள் செல்லவில்லை. என்ருலும் நல்லூர் தொகுதிப் பிரதிநிதி என்ற முறையில் பிரதமரை வரவேற்று ஆலயத்துக்கு அழைத்துச்சென்ற டாக்டர் நாகநாதன் தனது சட்டையைக் கழற்றிவிட்டு ஆசார சீலராகக் காட்சியளித்தார். டாக்டர் நாகநாதன் ஒரு கிறிஸ்தவர்தான். ஆனுலும் அவரது முன்னேர்கள் சைவர்கள். நல்லூர்க்கந்தன் ஆலயத்துக்கு தமது பாட்டனர் நிலம் எழுதி வைத்ததாகவும் டாக்டர் நாகநாதன் பெருமையுடன் கூறிக்கொள்கிருர்.

ராஜாஜி-ஆலயத்திற்கு வெளியே செருப்பைக்கழற்றிவிட்டதுபோன்று டாக்டர் நாகநாதன் சட்டையைக் கழற்றியதுபோன்றுடாக்டர் நாகநாதன் உட்பட நமது தமிழ்த்தலைவர்கள் [illegible] கட்சி நலன்களையும் கழற்றிவைத்துவிட்டு நாட்டின் நலனையும் கருதி ஒன்று சேர்ந்து செயலாற்றினுல் தமிழ் பேசும் மக்கள் இந்த நாட்டில் சகல உரிமையுடனு வாழமுடியும். நாடும் முன்னேறும்.

### ராஜாஜியும் காங்கிரஸும்

சென்ற தேர்தல் சமயத்தமிழ் அரசுக்கட்சியின் தேர்தல் பிரசாரத்திலும் தமிழ்க் காங்கிரஸின் தேர்தல் பிரசாரத்திலும் ராஜாஜியின்



பெயர் அடிபட்டது இருதரப்பினரும் ராஜாஜியை தத்தமக்குச்சாதகமாகஎடுத்துப்பேசினர்.

இந்தியத்தேர்தல் அடுத்த வருட முற்பகுதியில் நடைபெறவிருக்கிறது. இப்பொழுதே அங்கு தேர்தல் பிரசாரம் சூடுபிடித்துவிட்டது

பழம்பெரும் காங்கிரஸ்வாதியும்; தென்னுட்டுக் காந்தி எனப் பெயர்பெற்றவரும், தியாகியும், முதுபெரும் அரசியல் ஞானியுமான ராஜாஜி, காங்கிரஸுக்கு எதிராக சுதந்திரா கட்சி அமைத்துகாங்கிரசை 'பிச்சு' வாங்குகிருர். காங்கிரஸ்காரர்களும்ராஜாஜியையும் சுதந்திரா' கட்சியையும்விட்டு வைக்கவில்லை. சிறந்த தமிழ் வார சஞ்சிகையான 'கல்கி' இப்பொழுது இலக்கியப்பத்திரிகை மட்டுமல்ல 'சுதந்திரா' கட்சிப்பத்திரிகையுமாகும். 'கல்கி'யின் வெள்ளி விழா சமீபத்தில் கொண்டாடப்பட்டபொழுது தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர்களான முதல் அமைச்சர் எம். பக்தவத்சலமும் மற்றயோரும் நேரில் சென்று கல்கியையும் ராஜாஜியையும் வாழ்த்தியும் பாராட்டியும் உரை நிகழ்த்தினர்.

கொள்கைவேறு; தனிப்பட்ட நட்புவேறு அங்கு!

இங்கு நிலைமை அப்படியல்ல! ஒரே அரசாங்கத்தில் அங்கம் வகித்தாலும் பிரதமரை வரவேற்க ஒன்ருகக் கூடியிருந்தாலும் நமது தமிழ்த்தலைவர்கள் மூலைக்கொருவராக வக்கரித்துக் கொண்டிருப்பதைத்தான் காணமுடியும்.

நல்லூர்க்கந்தன் சன்னதியில் டாக்டர் நாகநாதனும் திரு. ஜி. ஜி. பொன்னம்பலமும்பிரதமருக்கு இருமருகிலும்நின்றுசுவாமிதரிசனம் செய்தனர். பிரதமரின் யாழ்ப்பாண விஜயம் தமிழரசு-தமிழ்க்காங்கிரஸ் தலைவர்களுக்குள், நெருங்கிய ஒற்றுமையை ஏற்படுத்தாவிடினும் வேற்றுமையையாவது குறைக்க உதவ புரிய வேண்டும்.

தேசிய ஐக்கியத்தைப்பற்றிப் பிரதமர் பெருமையாகப் பேசுகிருர். அரசாங்கக் கட்சியிலுள்ள தமிழ்க்கட்சிகளுக்குள்ளேயே ஒற்றுமை இல்லை'' என்று கிரியெல்லை எம் பி. திரு. பி பி. விஜய சுந்தரா ஜனப்பிரதிநிதிகள் சபையில் வெளிவெளியாகவே கிண்டல் செய்திருக்கிருர் இது தமிழ்க் கட்சிகளுக்குமட்டுமல்ல, பிரதமருக்குமே பெருமையளிக்காது.

### எதிர்க் கட்சயினர் விருப்பம்

தேசிய ஐக்கியத்தைப்பற்றியோ, தமிழ்க் கட்சிகளுக்குள் பிளவு இருப்பதைப்பற்றியோ எதிர்க் கட்சியினருக்கு கவலையில்லை. தேசிய அரசாங்கக் கட்சிகளுக்குள் பிளவு இருக்கவேண்டுமென்பதே அவர்கள் விருப்பம். பிளவு இல்லாவிடினும் பிளவு இருக்கிறதென்று கூறுவதுதான் அவர்கள் நோக்கம். அதன் மூலம் அரசாங்கத்தைப் பலவீனப்படுத்திவிடலமென்பது அவர்கள் நம்பிக்கை.

திரு. பண்டாரநாயகா சுட்டுக் கொல்லப்படுவாரென சோதிடம் கூறிய இந்திய சோதிடர் இலங்கை வந்திருக்கிருரென்றும், இந்த அரசாங்கம் அடுத்த மாதம் வீழ்ச்சியடைந்துவிடுமென்றும் சர்வாதிகார ஆட்சி ஏற்படுமென்றும் அந்தச் சோதிடர் ஆருடம் சொல்லியிருப்பதாக ஆர். ஜி. சேனநாயகா கூறுகிருர். யாருடைய ஆருடமோ இது?



சலக்கழிச்சல்

தோல்சம்பந்தமான
சொறி, சிரங்கு,
தேமல், கரப்பன்
முதலியன குணப்படுத்த
உத்தரவாதம்.

சச்சிதானந்தா
வைத்தியசாலை

மித்திரன் அம்பாள்
கோவிலடி,
துன்னலை வடக்கு.
கரவெட்டி P. O.







ST. ANTHONY'S HARDWARE STORES LTD
516, SKINNERS ROAD SOUTH, COLOMBO 10.

சென்ற். அந்தோனிஸ் குறூப்
516, ஸ்கினெஸ் வீதி, தெற்கு,
கொழும்பு—10.
டெலிபோன்: 4261
4262.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய-இலங்கைத் தொடர்பின் சின்னம்
# மாவிட்டபுரம் ஸ்ரீகந்தசுவாமி கோவில்
## இன்று நடைபெறும் பஞ்ச ரதோற்சவம்



விநாயகர், சிவபெருமானுடன் இடும்பன் வாகனத்தில் முருகப்பெருமான் வீதிவலம் வருகிறார்.

ஈழத்தின் வடபால் யாழ்ப்பாணக்குடாநாட்டில் யாழ்ப்பாணப்பட்டினத்திலிருந்து பத்துமைல் வடக்கே அமைந்தவூர் தான் 'மாவிட்டபுரம்'. இத்தெய்வீக ஸ்தலத்திற்குக் கிழக்கே பளை, வீமன்காமம், மயிலிட்டியும், தெற்கே தெல்லிப்பழையும், மேற்கே கொல்லங்கலட்டி, பன்னாலை, கீரிமலையும், வடக்கே போயிட்டி, காங்கேசன்துறை, தையிட்டி ஆதியாம் ஊர்களும் எல்லைகளாக அமைந்திருக்கின்றன. பல வருணத்தவர்களும், பல தொழில்களைச் செய்பவர்களும் இங்கு வாழ்கிறார்கள். வெற்றிலை, கமுகு, தானிய வகைகள், கிழங்கு வகைகள் ஆதியனவே முக்கிய பொருள் வழிவாய்ப் பயிர்களாக இங்கு பயிரிடப்படுகின்றன. இங்கு காணப்படும் தென்னைகள் பல, கோவிலிற்கென விடப்பட்டுள்ளன. உரிய காலங்களில் அதன் வருவாயைக் கோவி



சு. து. சண்முகநாதக்குருக்கள்
(கட்டுரையாளர்)

லிற் சேர்ப்பது வழக்கம். விரதகாலங்களிலும் மற்றும் விசேஷ காலங்களிலும் மக்கள் கடும் விரதம் பூண்டு மிகுந்தபயபக்தியுடன் ஆலய தரிசனஞ் செய்துவருகிறார்கள்.

மாவிட்டபுரத்திற்குப் புகைவண்டி மூலமாகவும், தெருக்கள் மூலமாகவும் மிகவுஞ் சுலபமாக வந்தடையலாம். பலாலிவிமான நிலையம் இங்கிருந்து கிழக்கேஇரண்டு மைல்களுக்கப்பால் இருக்கின்றது. காங்கேசன்துறைத் துறைமுகம் வடக்கே ஒரு மைலுக்கப்பாலும், கீரிமலை நன்னீரூற்றுக்கள் மேற்கே ஒன்றரை மைலுக்கப்பாலும் இருக்கின்றன. மாவிட்டபுர எல்லையையடைந்ததும், பச்சிளம்பயிர்கள்வரிசைவரிசையாகத் திகழும் காட்சியும், மஞ்சினை மிஞ்சும் கொண்டல் சேர் கோபுரத்தின் கவினுறுகாட்சியும்பார்ப்பதற்கு மிகவும் இரம்மியமாயிருக்கும். இதேபோல், கோவிலின் உட்புற அமைப்பு வேலைகளும் விதம்விதமான அழகைத்தந்து மனதைத் தம்பால்ஈர்த்துவிடுகின்றன. இங்குள்ள வாகனங்களும், சிற்பத் தேர்களும் எல்லையற்ற அழகைக்கொண்டுள்ளதால் அவற்றைத் திரும்பத்

திரும்பப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் ஏற்படும்.

இக்கோவிலில், விக்கினேஸ்வரர், சந்தான கோபாலர், மகாலட்சுமி, சிதம்பரேஸ்வரர், வைரவர், நவக்கிரகங்கள், சண்முகர், முத்துக்குமாரசுவாமி, சுப்பிரமணியர், சந்திரசேகரர், மயூரம், பலிபீடம் ஆதிய விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் வள்ளி தெய்வானை சமேத கந்தசுவாமி பிம்பங்கள் சோழர்காலச் சிற்ப வடிவினைக்கொண்டு மிகவும் அழகாகக் காட்சியளிக்கின்றன. மயிலின் மீது இரு சக்திகளோடும் வீரவேல், வெற்றி வேலோடும் அருள் சுரந்துகொண்டு நிற்கும் திருவருட்காட்சிவார்த்தைகளாற் கூறமுடியாதது. அங்கு ஆதிகால விக்கினேஸ்வரரும், கதிரைவேலும், சிவலிங்கமும் இருக்கின்றன. கர்ப்பக்கிருஹம், அர்த்த மண்டபம் ஆதியன கருங்கற்களாற் சிற்பவடிவோடு கட்டப்பட்டு 1927-ம் ஆண்டிற் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. மகா மண்டபம், நிர்த்த மண்டபங்களின் கருங்கற் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் பூர்த்தியாகும் நிலையில் காட்சியளிக்கின்றன. சிதம்பரமண்டபம், வஸந்த மண்டபம், தட்டி மண்டபம், வேட்டைமண்டபம் ஆதியனவும்முறையாகக் கட்டப் பட்டிருக்கின்றன. யாகசாலை, பாகசாலை களஞ்சியம், இன்னும் வேறும் பல மண்டபங்களும் இங்குள்ளன. இக்கோவிலில் அசையா மணிக்கோபுரம் ஒன்றுதான் இப்போது உண்டு.

மூன்று சுற்றுப்புறவீதிகள் இங்குள்ளன. சுக்கிர வாரத்திலும் மாதந்தோறும் வாரந்தோறும் வரும் கார்த்திகையிலும், சித்திரை, தை மாதச் சங்கிராந்தி புண்ணிய காலத்திலும், உள்வீதியில் முத்துக்குமாரசுவாமி உற்சவ மூர்த்தியாக வலம்வருவார். ஏனைய உற்சவாதி தினங்களில் மூன்றும் வீதியிலும் சுவாமி பவனி வருவார். இரண்டாம் வீதியின் வடபால் சிறந்த நந்தவனம் இருக்கின்றது. அந்த நந்தவனவாசலில்ஒருபிரமாண்டமான 'காஞ்சிமா' நிற்கின்றது. இதுதான் இத்தல விருட்சமாகும். வீதிகளோரமாகப் பல கூபங்கள் இருக்கின்றன. பல தர்மமடங்களும் கட்டப் பட்டுள்ளன. உற்சவாதி காலங்களிலும் மற்றும் ஏனைய விசேஷ காலங்களிலுஞ் சில மடங்களில் அன்னதானம் வழங்கப் பட்டு வருகின்றது. கோவிலின் தென்பால் நுண்கலைகளான, இயல் இசை நாடகம், நடனம், ஓவியம், சிற்பம் ஆதியனவற்றைப் பயிற்றுவிப்பதற்குப்

மான ஒரு கலாச்சார மண்டபத்தை நிறுவ இங்குள்ள 'முத்தமிழ் கலைமன்றம்' என்ற கலாச்சார ஸ்தாபனம் முயன்றுவருகிறது. இந்த ஸ்தாபனத்தார் பல கலைகளையும் பயிலக்கூடிய ஒரு பல்கலைக்கழகத்தையும் நிறுவ உத்தேசித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இக்கோவிலில் நடைபெற்றுவரும் பூசைகள் கிரியைகள் யாவும் ஆதிகாலத்திலிருந்து வேத சிவாகம முறைப்படி இன்றும் நடைபெற்றுவருகின்றன உஷக்காலம் அதிகாலையிலும், காலசந்தி காலையிலும், உச்சிக்காலப் பூசை நண்பகலிலும் சாயரட்சை சாயங்காலத்திலும், இரண்டாம் காலப் பூசை இரவிலும், பின்னர் அர்த்தஜாமப் பூசை மூன்றும் நாலாம் சாமங்களிலும் நடாத்தப் பட்டுவருகின்றன இப்பூசைகள் சில சமயங்களிலே தாமதித்தும் நடைபெறுகின்றன.

இக்கோவிற் பூஜைகளின் போது ஆதிகாலத்துக் கலைஞர்களின் சந்ததியினரே இன்றும் பணிபுரிகிறார்கள். இங்கு இசையாளர்களில் நாதஸ்வரக்கலைஞர்களுக்கே முதன்மையான ஸ்தானம் வழங்கப்பட்டிருக்கிறது. இவர்கள் இவ்வாதீனத்தின் சார்பில் தேர்த்திருவிழா வன்று கோவிலின் உட்துவார கோபுர வாசலில் வைத்து ஷண்முகப் பெருமான் முன்னிலையிற் பக்தர்கள் புடைசூழ ஆதீனகர்த்தாவால் கௌரவிக்கப்படுவது வழக்கமாகிவிட்டது. இங்கு நாதஸ்வரம் வாசிப்பவர்களுக்கு நியந்தனைகள் பல உண்டு.


வெள்ளை கட்டும் கலைஞர்களும் தேரிலன்று உள்வீதியிலுள்ள திருமஞ்சனக் கிணற்றடியில் வைத்துக் கௌரவிக்கப்படுகின்றனர். இவர்களும் இங்கு பரம்பரை பரம்பரையாக இக்கலையில் ஈடுபட்டுவருகின்றனர். இக்கலைஞர்கள் ஆனைக்கோட்டை, மாவிட்டபுரம், வீமன்காமம், தையிட்டி ஆதிய இடங்களிலிருந்து தத்தம் சேவைகளைச் செய்துவருகிறார்கள். சிற்ப வேலை, மர வேலை, இரும்பு வேலை, இன்னும் இக்கோவிலுக்கு வேண்டிய பல தொழில்களைப் புரியும் கலைஞர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் அன்றைய தினத்திற் கௌரவம் அளிக்கப்பட்டுச் சன்மானங்கள் வழங்கப்பட்டுவருகின்றன.

இக்கோவிலில் நடைபெறும் பல்வேறு உற்சவங்களுள் தைப்பூசத் திருநாளும், ஆனி, ஆடி மகோற்சவாதிகளும், ஐப்பசி சுக்கிரவாரம், கந்தசஷ்டி விழாக்களும், கார்த்திகையில்வரும் திருக்கார்த்திகை விழாவும் மிகமிகப் பிரசித்தமானவையாகும்.

தைப்பூசத் திருநாளன்று ஷண்முகப்பெருமான் தேரின்மீதிவர்ந்து அடியார்களுக்கு அருள் தரும் காட்சி பார்க்கப் பார்க்கப் பரவசமூட்டும். ஆனி மாத பூர்வ பக்ஷ ஷஷ்டியில் துவஜாரோஹணமாகித் தொடர்ந்து இருபத்தைந்து நாட்களுக்கு உற்சவங்கள் நடைபெறும். ஐந்தாம் திருநாளன்று ஷண்முகப் பெருமான் திருநடனமாடும் உற்சவம் நடைபெறுகிறது இந்நடனம் வாத்திய இசை, பஜனை ஆதியவற்றோடு நடைபெறும் காட்சியுங் கோலமும் தன்மையும்

யார் வீதிவலம் வருங்காட்சியும் கண்கொள்ளாக் காட்சியாகிவிடும் இருபத்து இரண்டாம் திருநாள் 'மிருகயாத்திரை' என்னும் வேட்டைத் திருநாளாகும். அன்றும் இங்கு ஒரு தனிச் சிறப்பை மக்கள் காண்பார்கள். இருபத்து மூன்றும் திருநாள் பொய்ச் சப்பரத் திருநாளாகும்.

ஒவ்வொன்றும் நூறு யாரளவிலிருக்கும் நான்கு வடக்கயிறுகள் பூட்டிய இப்பெருஞ் சப்பரத்தை இழுப்பதற்குப் பத்தாயிரத்துக்கு மதிகமானவர்கள் வேண்டும். இப்பெருஞ் சப்பரம் அசையும்போது 'இது ஒரு அசையுங் கோபுரம்' எனவும், 'மாமலையொன்று ஊர்கிறதோ' என்றும் மக்கள் வியப்புறுவர் இச்சப்பரத் திருவிழாவைத் தரிசிக்க



பஞ்சரதங்களில் சிறப்பான சிற்ப வேலைகளுடன் கூடிய ஆறுமுகப்பெருமானின் ரதம் கோபுர வாசலில் காட்சியளிக்கிறது.

வேறெங்கும் காணமுடியாதவை கார்த்திகைத் திருநாளன்று அநேகர் காவடி எடுத்தும், நாள் பூராவும் மாவிளக்கேற்றி சகஸ்ர நாமார்ச்சனைகள் செய்வித்தும் தத்தம் வழிபாடுகளை இயற்றுவர். பிள்ளைவிற்றல், அன்னப்பிராசனம், அங்குகாசு வழங்கல், மற்றும் தத்தம் நேர்த்திக் கடன்களைப் பூர்த்தி செய்தும், அபிஷேகம் செய்வித்தும் தங்களது வழிபாடு முறைகளை அடியார்கள் செய்வர். அன்றிரவு மும்மூர்த்திகளும் பூஞ்சப்பரத்தில் வீதிவலம் வருங் காட்சியும். பகலில் மயில்மீதேறிக் கந்தசுவாமி



வேள்வி மண்டபத்தில் பூசை நடைபெறுகிறது.

இலங்கையெங்கணுமிருந்து பக்தர்கள் பெருந்தரளாகக் கூடிவிடுவார்கள். இவர்கள் அடுத்த நாள் நடைபெறும் பஞ்சரதோற்சவத்தையும், ஆடி அமாவாசைத் தீர்த்தோற்சவத்தையும் தரிசித்துத்தான் தத்தம் இல்லங்களுக்கு ஏகுவார்கள்.

இருபத்து நாலாம் நாள் உற்சவம் பஞ்சரதோற்சவமாகும். விக்கினேஸ்வரர், கந்தசுவாமி, சந்திரசேகரர், ஷண்முகர், தண்டேஸ்வரர் ஆதியாம் மூர்த்திகள் வரிசையாகத் தேர்ன்மீதிவர்ந்து வரும் காட்சி உண்மையிற் பார்ப்பதற்கு இரம்மியமானதாக இருக்கும் அதிகாலையில ஷண்முகப்பெருமான் மயிலோடு வள்ளி தெய்வானையம்மன் சமேதராய் முறையாக அலங்கரிக்கப்பட்டுச் சிம்மாசனத்தின் மீது திருநடனத்துடன் ஆடி அசைந்து அசைந்து வந்து தோன்றும்காட்சியும், அதே போல, அன்று மாலை பக்தர் குழாம் புடைசூழ, நாதஸ்வர இசை ஒருபால் முழங்க சங்கு சேமக்கல வாத்தியங்கள் ஒருபால் முழங்க, முருக நாமகீர்த்தனைகள் ஒருபால் இசைக்க இன்னிசை ஒருபால் ஒலிக்க, தேவர்களையொத்த அந்தணர்கள் பூமாரிசொரிய ஷண்முகப்பெருமான் ஆடி ஆடி அசைந்து அசைந்து தமது யதாஸ்தானத்தை அடையுங்காட்சியும் அடியார் உளத்தினைப் பக்திக்கடலில் ஆழ்த்தும். இக்காட்சியைத்தரிசிக்க அன்றுகூடும் மகாஜனங்களின் தொகை

(10ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா விழித்தெழுந்துவிட்டது

## சுதந்திர ஜனநாயக அமைப்புள் ஆற்றி வரும் சாதனை

— டாக்டர் ஏ. என். ஜா —

கடந்த சில மாதங்களில் நிகழ்ந்த சம்பவங்களிலிருந்து இந்தியா தனது அபிவிருத்திக்குத் தன்னையே நம்பவேண்டுமென்பதும், பிற நாடுகளின் உதவியை எதிர்பார்ப்பதை நிறுத்த வேண்டுமென்பதும் சிந்தனையுள்ள இந்தியர்களின் கருத்தாகும்.

விலைவாசி உயர்வு, பண அழுக்கம், உணவுப்பிரச்னை ஆகியன மலிந்த இந்நேரத்தில் இப்படிக் கூறுவது புத்திசாலித்தனமான காரியமாகத்தோன்றுதிருக்கலாம். ஆனால், இந்திய சுதந்திரத்துக்குப்பின் நம் சாதித்தவற்றையும், எம்மிடமிருக்கும் அபரிமிதமான மூலதனங்களையும், எதிர்காலத்தில் சம்பூரண பொருளாதார அபிவிருத்திக்கு அமைக்கப்பட்டுள்ள திடமான அத்திவாரத்தையும் நாம் கருத்திற்கொள்ள வண்டும்.

நீர்ப்பாசன அணைக்கட்டுகள், மின்சக்தித்திட்டங்கள், எஃகு ஆலைகள், அதிபார என்ஜினியரிங், சிமெந்து தொழிற்சாலைகள், கிராமிய மின்னியக்கம், பூமி அகழும் சாதனங்களும் டிராக்டர்களும், மோட்டார் போக்குவரத்து, தொடர்புகள் ஆகியவற்றினுல் புதிய சக்திகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. பொதுத்துறையும் தனியார்துறையும் பல திசைகளில் முன்னேறியுள்ளன. பாதுகாப்பு உற்பத்தியில் ஆற்றப்பட்டுள்ள சாதனைகள் அனைவரும் அறிந்ததே.

ஆனால், இன்னும் துரிதமான அபிவிருத்திக்கு இடமுண்டு அத்துடன் அவசியமும்கூட. முக்கியமாக விவசாயத்துறையில் இது தேவை. பரிகாரம் எமது கைகளிலேயே உண்டு. ஒரு சிலவற்றை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

முதலாவதாக விவசாயம். இத்துறையிலுள்ள உண்மையான பிரச்னை முதலீடுசெய்வதில் அல்ல. தலைமையும், நிர்வாகத் திறமையுமேதான் பிரச்னை. அதுவும் சோம்பிக் கிடக்கும் மாபெரும்கிராமிய மனித சக்தியைப்பயன்படுத்துவதில்தான் முக்கிய பிரச்னை.

விவசாயத்திலும், கிராமியப்புனரமைப்பிலும்நிறைய வேலை உண்டு. நில அபிவிருத்தி. வெள்ளத்தைக் கட்டுப்படுத்தல், நீர்ப்பாசனம், குளங்களையும் வாய்க்கால்களையும் திருத்துதல், கிராமப்புற நீர் விநியோகத் திட்டங்கள், தெரு அமைத்தல்-இப்படிப்பல வேலைகள். சாதாரணகருவிகளும் சாதாரண திறமையும் இவற்றுக்குப் போதுமானவை.

இனி, கமக்காரருக்குப் போதியஉந்துதலும்தேவை. சுய தேவைக்கு மாத்திரம் பயிரிடும் கமக்காரரை சந்தைக்கான பொருள்களையும் விவாசயம்செய்யத் தூண்ட வேண்டும். இவ்விஷயத்தில் விலையைக் கூட்டியும், சந்தை உந்தல்களை அளித்தும்கூட்டுறவு இயக்கம் உதவிஅளிக்கலாம். கமக்காரருக்கு இப்போதுகைக்கடிகாரம்பைசிக்கிள், காலணி, சிகரெட், டோர்ச்லைட் போன்ற பல பொருட்களுக்கும் தேவை இருக்கின்றது. அவரது இத்தேவையை அதிகரிப்பதன் மூலமும் அவரைநாம்விவசாயத்தில் மேலும் ஊக்கப் படுத்தலாம்.

இப்போதுள்ள திட்டங்களை விரைவில் முடித்துவிட்டு, இருக்கும் மனித சக்தியைவேறுதிட்டங்களில் பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளிலும் ஈடுபடுத்தவேண்டும்.

நிர்வாகத்தில் பலமாற்றங்கள் செய்யப்படவேண்டும். நிர்வாகம் இயங்கும் முறை அவசியமில்லாததாமதத்தை ஏற்படுத்துகிறது ஒரு திட்ட வேலை ஸ்தலத்தில் காவல் காக்கும் காவலாளிகளுக்கு ரூபாய் 1000 மொத்தச் சலவில் யூனிபாரம் அளிப்பதா வேண்டாமா என்பது பற்றிய விவாதம் ஒன்று, ஒரு மணித்தியாலத்துக்கு மேல் நடைபெற்றபோது, நானும் அதிதுரதிர்ஷ்ட அனுபவத்துக்காளாகியிருந்தேன்விவாதத்தில் பங்குபற்றியவர்களின் மொத்த மாதாந்தச் சம்பளம் ரூபாய் 25,000க்கும் மேற்பட்டதாகும். நேரம் என்றால் பணம் என்பதும், ஆகவே நேரமும் ஓர் மூலதனம் என்பது சரிவரப் புரிந்துகொள்ளப்படவில்லை.

இன்னும் ஒரு சிறிய ஆனால் முக்கியமான சீர்திருத்தம் தேவை. இப்போதைய வரவு-செலவுத்திட்ட வருடம் ஏப்ரலிலிருந்து மார்ச்வரை செல்கிறது. திட்டத்தில் குறிக்கப்பட்ட தொகைகளை சம்பந்தப்பட்ட இலாகாக்கள் செயற்படுத்தத் தொடங்குமுன், மழை வந்து நடவடிக்கைகளை ஒரேயடியாக ஸ்தம்பிக்கச் செய்யாவிட்டாலும், ஓரளவு வேகத்தைக் குறைத்துவிடுகிறது. நிதிவருடத்தை ஜூலை தொடக்கம் ஜூலைவரை மாற்றுவது புத்திசாலித்தனமாகும். இந்தச் சாதாரண நடவடிக்கை நிர்வாகத் திறமைக்கும், திட்டங்களை விரைவாகவும் பயனளிக்கும் முறையிலும் அமுலாக்கவும் வழி செய்யும்.

கடைசியாக, விஞ்ஞானம். எமது காலஞ்சென்ற பிரதமர் ஜவஹர்லால் நேரு விஞ்ஞான வளர்ச்சிக்கு உற்சாகத்தை எவ்வளவோ ஊட்டியும், இந்திய விஞ்ஞானத்தையும் தொழில் நுட்பத்தையும் ஏதோ நோய் பாதிப்பதாகத் தெரிகிறது. இந்திய விஞ்ஞானிகள் மேற்கு நாடுகளில் பயிற்சி பெற்றபின் தாய் நாடு திரும்ப விரும்பாதது இந்த நிலைமைக்கு ஓர் அறிகுறியாகும். இவ்விஞ்ஞானிகளின் திறமையும் வேலையும் போதியளவு இங்கு மதிக்கப்படாதது; ஆராய்ச்சிக்குத்தகுந்த வசதிகள் இல்லாமை; சாத

(10-ம் பக்கம் பார்க்க)

# இன மத பேதமற்ற இந்தியா யாவர்க்கும் சொந்தமானது

இந்தியா இன்று தனது 20-வது சுதந்திர தினத்தைக் கொண்டாடுகிறது. இந்தியாவின் மகத்துவம் அதன் பலவேறு இனங்களின் ஒற்றுமையிலும் ஒருமைப் பாட்டிலுமே தங்கியுள்ளது. இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் அதனையே இங்கு வலியுறுத்துகிறார்.

டாக்டர் பீம் சென் சச்சார்

(இந்தியத் தூதுவர்)

இன்று இந்தியா தனது 20-வது சுதந்திர தினத்தைக் கொண்டாடுகிறது. கடந்த 19 வருடங்களில் பல சரித்திர நிகழ்ச்சிகள் நடைபெற்று விட்டன. பிரிவினையுடன் கிடைத்த சுதந்திரம் பல சிக்கலான பிரச்னைகளை இந்தியாவின் உடனடிக் கவனத்துக்குக் கொண்டுவந்தது.

முக்கியமாக கிழக்கு, மேற்கு பாகிஸ்தானிலிருந்து வந்த 80 லட்சம் அகதிகள் வாழ்வின் புனரமைப்பு பெரிய பிரச்னையாக விளங்கியது. சில சமயங்களில் அது தீர்க்கமுடியாத பிரச்னையாகவே தோன்றியது. ஆனால், புதிய சுதந்திரம் தோற்றுவித்த பிரச்னைகளை உறுதியுடன் போராடுவது என்று இந்தியா உறுதிபூண்டது. அதனுற்தான் இன்று, அப்பிரச்னை இன்னும் எம்முடன் இருந்து வந்தாலும், அதைத் தீர்ப்பதில் இந்தியா எவ்வளவு செய்துள்ளது என்பதை நாம் திருப்தியுடன் திரும்பிப் பார்க்க முடிகிறது.

அகதிகளின் புனரமைப்புடன் நெருங்கிய தொடர்புள்ள மற்றப் பிரச்னை சமூக, இன ஒற்றுமையைப் பாதுகாக்கவும், நிலைநாட்டவும் மேற் கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளின் அவசியமாகும் கிளப்பப்பட்ட இன உணர்ச்சிகளையும், கொந்தளிப்பையும் கட்டுப்படுத்துவது இமாலயப் பிரச்னையாகத் தோன்றியது. ஆனால், இந்தியா தயக்கமின்றித் துணிவுடன் அதைத் தீர்க்க முன்வந்தது. அப் பிரச்னையைத் தீர்ப்பதில், தனது விலைமதிப்பற்ற மாணிக்கத்தை நாட்டின் தந்தையை-மகாத்மா காந்தியை இந்தியா அர்ப்பணித்தது.

இந்தியா மதச்சார்பற்ற நாடாகும். எமது சுதந்திரப் போராட்டம் எந்தவொரு குறிப்பிட்ட மதத்தினின்றும் நடாத்தப்படவில்லை. இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர், சமணர், பௌத்தர், பார்ஸிகள் ஆகிய இனங்களைச் சார்ந்த இந்தியர்களில் முதன்மையானவர்களின் இரத்தம் ஆறுகப் பாய்ந்து கலந்த போராட்டம் அது

இந்தப் பொதுச் சரித்திரப் பாரம்பரியச் செல்வத்தை நாம் பாதுகாப்பதுடன் மாத்திரம் நிற்காது மேலும் வளர்க்க நாம் முயற்சி செய்து வருகிறோம். எந்த மதத்தைச் சேர்ந்தவர்களானாலும் திறமையுள்ளவர்கள் எல்லோருக்கும் இந்நாட்டின் மிகப்பெரிய உத்தியோகங்கள் திறந்து கிடக்கின்றன. உதாரணமாக மதிப்புக்குரிய பதவியான இந்திய உப-ஜனாதிபதிப் பதவியில் அமர்ந்திருப்பவர் டாக்டர் ஸக்கீர் ஹுசேனுவார்

இந்தியாவின் இந்த மதச்சார்பற்ற கொள்கையின் பயனாகத்தான் பாகிஸ்தானுக்கும், இந்தோனேஷியாவுக்கும் அடுத்தபடியாக உலகிலுள்ள மிகப் பெரிய தொகையினரான 6 கோடி முஸ்லிம் மக்களைத் தனது மக்களின் ஒரு பகுதியினராகக் கொண்டு இந்தியா பெருமைப்பட முடிகின்றது.

# உலகமேடை

“ஐயா பொதுஜனமே வாருங்கள். குடையை ஒரு பக்கம் வையுங்கள். நல்லெண்ணெய்ப் போத்தலை இங்கே வையுங்கள் எப்படி செளக்கியமா?'' என்ற எனது கேள்விக்கு 'ஆமாம்' என்ற ஒரே வார்த்தையில் பதிலளித்துவிட்டு ஆசனத்தில் அமர்ந்துகொண்டார் கந்தையா.

உடனடியாக, ''இந்த நல்லெண்ணெயை உமக்காகவே கொண்டுவந்தேன். சோற்றுக்கு இதைப்போன்ற நெய் எதுவுமே இல்லை, தெரியுமா? வைத்துக்கொள்'' என்று கொடுத்தார்.

நன்றி தெரிவித்துவிட்டு, என்ன விசேஷம் என்று வினவினேன், ''விசேஷம்'' என்ன என்று கேட்காதீர். உன்னிப்பாகக் கவனித்துப் பார்த்தால் எல்லாமே விசேஷம்தான் இயற்கை நியதி என ஒன்று உண்டல்லவா? இந்த அடிப்படையில் எல்லாமே விசேஷம்தான்'' என்றேன்.

''உம்முடையபிடிகையை, ஏன் பூர்வ பீடிகையைக்கூட புரிந்துகொள்வது கஷ்டம் தான். விஷயத்தைச் சொல்லு. நான் பதில் சொல்கிறேன். சொந்த விஷயமா? அல்லது உலகப் பிரச்னையா?'' என்று கேட்டார்.

''எந்தப் பிரச்னையும் ஒரு ஆட்டுவிக்கும் சக்தியைக் கொண்டே இயங்குகிறது அல்லவா?'' என்றேன்.

''கதையை வளர்க்காதீர். நான் இப்போது வந்த விஷயம் ஒரு முக்கிய பிரச்னை. அது உலகப் பிரச்னை. தென்கிழக்காசியாவில் முக்கிய ஒரு அரசியல் அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறதல்லவா?'' என்றார் எரிச்சலுடன். அப்போது முகத்தில் அரும்பிய வியர்வையை அவர் துடைத்துக் கொண்டதைக் கண்டேன்.

''புரிகிறது. இந்தோனேஷியாவின் மலேஷிய எதிர்ப்புக் கொள்கைக்கு அப்பு வைக்கப்பட்டதைத்தானே சொல்கிறீர்கள்'' என்றேன்.

''சரியாகச் [illegible] சொல் ஐயா, சொல்'' என்றார்.

''ஐயா, பொதுஜனம் அவர்களே, கௌரவ ஸ்ரீமான் கந்தையாவே, கடந்தமூன்றுண்டு கிரகணம் இந்த விஷயத்தில் விட்டுப் போயிற்று. இந்தோனேஷியாவையும், மலேஷியாவையும் அதனுல் பிரிட்டனையும், உலகத்தையும் பீடித்திருந்த கிரகணம் 5 நாட்களுக்கு முன் விலகிவிட்டது. இரு நாடுகளும் ஒரு சமரச உடன்படிக்கைக்கு வந்துவிட்டன'' என்றேன் சாவதானமாக.

''என்ன ஓய், சர்வசாதாரணமாகச் சொல்லுகிறீர். அது பெரிய விஷயம் அல்லவா?'' என்றார்.

''பெரிய விஷயம் இல்லை என்று நான் சொல்லவில்லையே. இதனுல் 3 நாடுகளின் பொருளாதாரக் கஷ்டமும் ஓரளவுநிவர்த்தியாகியிருக்கிறது. இந்தோனேஷியாவுக்கும், மலேஷியாவுக்கும், பிரிட்டனுக்கும் அதனுல் நன்மையேவடபோர்னியோ பகுதியிலுள்ள ஸரவாக்கிலும், சபாவிலும் 50,000 பிரிட்டிஷ் துருப்புகள் வைக்கப்பட்டிருந்தன. இவை வாபஸ்பெறுமாதலால்பிரிட்டனுக்கு [illegible] நீங்கிவருகிறது. அடுத்தாற்போல் மலேஷியா, இந்தோனேஷியா ஆகிய இரு நாடுகளும்கூடத் தங்கள் ராணுவச்செலவைக் குறைத்து, பொருளாதார முன்னேற்றப் பாதையில் செல்வதற்கானவழி சீர்ப்படுத்தப்பட்டிருக்கிறது'' என்றேன்.

''அப்படிச்சொல்லும். அப்படிச்சொல்லும். உலகில் ஒரு பிரதான நெருக்கடி தளர்ந்துவிட்டது. உண்மைக்கு ஒருநாளும் அழிவில்லை. இறுதிவெற்றி அதற்குத்தான். நாஸ்திகவாதத்தின்மீது ஆஸ்திகவாதம் கொண்ட ஒரு மாபெரும் வெற்றி என்றே இதைச் சொல்லுவேன்'' என்றார் பொதுஜனம்ஆவேசமாக.

''சுவாமி, தெய்வநம்பிக்கைக்காரர்களுக்கு ஆவேசம் கூடாது. ஆவேசம் தீயசக்தி. சைத்தானின் பிரதிநிதி. பலவீனத்தின் அறிகுறிதான் அது. தெய்வசக்தியே பலம். இதற்கு விவேகானந்தரையோ பரமஹம்ஸரையோ மகாத்மாகாந்தியையோ உதாரணம்காட்டி என்ன பலன்? ஒவ்வொரு சாதாரண மனிதனும் இதைஉணர வேண்டும். பக்குவப்படும் மனிதனுக்குத்தான் இந்த உண்மை தெரியும். இந்த மகத்தான உண்மையை உணர்ந்தவே பல மகான்கள் தோன்றினார்கள். உணர்ந்தவர்கள் வென்றார்கள். மற்றவர்கள் தோற்றார்கள் இல்லையா?'' என்றேன்

''உண்மை, உண்மை. யோசிக்கத்தான்வேண்டும்'' என்று கூறியபடியே எழுந்துவிட்டார் பொதுஜனம்.

''ஐயா, ஆடாத ஆட்டமெல்லாம் ஆடி, அம்பலத்திலும் ஆடி இறுதியில் இறைவனுக்குமுன், இறைவனின் சன்னிதியில்தான் ஆடவேண்டும். இன்றேல் அழிந்துதான்போகவேண்டும்'' என்றுவிட்டு நானும் எழுந்தேன்.

அவர் ''வணக்கம்'' எனக் கூறி போய்விட்டார்.

## இறைவன் சன்னதியில் . . .

## உள்ளப் பூ

''நிமலன்'

கிள்ளை மொழி பேசி
உள்ள மதைத் திறந்து
கள்ள மற்ற தென்றே
காட்டி விட்டாய்.

முல்லை முறு வலினால்
எல்லை யற்ற உணர்வுத்
தொல்லை தந் தென்னுளந்
தொட்டு விட்டாய்.

கள்ள விழி பேசுங்
கற்பனைக் கதையிலே
உள்ளம் பறிகொடுத்தே
உழலுகிறேன்.

தென்னு தமிழணங்கே
என்ன இனிப் பேச்சு
உள்ள மதைப் பூவாய்
உனக்களிப்பேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வாரச் சிறுகதை

## உள்ளம்

— சி. இராஜநாயகம் —

எல்லோரும் நல்லவர்களாக நடந்துகொள்ள வேண்டுமென்றுதான் விரும்புகின்றார்கள். அவர்கள் எல்லோரும் அப்படி நினைத்து விடுகிறார்களே யல்லாமல் நல்லவர்களாக நடந்துவிடுவதுமில்லை, நடந்துவிட முடிவதுமில்லையென்பது உண்மைதானோ என்னவோ அது சந்திராவின் வாழ்வில் உண்மையாகிவிட்டது.

சந்திராவின் அண்ணனும் பாலுவும் கல்லூரி நண்பர்கள். பள்ளிக்கூட நட்பு படலைவரைக்கும் என்றில்லாமல், அவர்கள் அன்பும் மதிப்பும் வளர்ந்து குடும்ப நட்பாக மாறியது.

சந்திராவின் உள்ளத்தில் நீங்காத இடத்தைப் பெற்றுக்கொண்டவன் ஜெயம். அவன் அவளை தன் அன்புத் தெய்வமாகப் போற்றி வந்தான்; அவளும் தன் இதயக் கோவிலில் அவனை இருத்தித்தான் வணங்கும் தெய்வமாகப் பூசித்துவந்தாள்.

''சந்திரா! அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து எனக்கு கண்டிக்குப்போகும்படி மாற்றம் வந்துள்ளது. முன்புபோல் சந்திக்கவும் கடிதம் எழுதவும்முடியாதே யென்று நினைக்கும்பொழுது தான் மிகுந்த கவலையாயிருக்கின்றது. உனது அண்ணனின் நண்பன் பாலு எனது நண்பனுங்கூட. அவனிடம் எங்கள் காதலை வெளிப்படுத்தியுள்ளேன். அவன் உதவியை நாடினேன். தன் ஆருயிர் நண்பனுக்குத் துரோகமாக நடந்துகொள்ள விரும்பவில்லை என்றும் உனக்கு மிகவும் உதவியாயிருப்பான். அவ்விடம் பதில் கொடுத்தால் எனக்கு அனுப்புவான். உடன் பதிலை எதிர்பார்க்கிறேன்.'' இது அவளுக்குக் காதலன் ஜெயம் கடிதம் மூலம் விடுத்த அன்புக் கட்டளை.

அதை அவளால் நிராகரித்துவிடத்தான் முடியுமா? கடிதம் எழுதுவதாயிருந்தால் பாலுவின் நட்பைப் பெறவேண்டும்.

பாலு, அவர்கள் வீட்டிற்குப் பல வருடங்களா வந்து போயிருக்கிறான். ஆனால் இதுவரை அவனுடன் தனிமையாகப் பேசவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டதில்லை. அப்படியான சந்தர்ப்பத்தை உண்டாக்க அவள் விரும்பியதுமில்லை. அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்பொழுதுகூட அவர்கள் பேச்சில் கலந்துகொள்வதும் இடையாது.

ஆனாலும் பெண்களால் சாதிக்க முடியாதது தான் என்ன?

எப்படியும் அண்ணனும் பாலுவும் பேசிக்கொண்டிருக்கும்பொழுது இடையில் பேச்சுக் கொடுத்துக்கொள்வது என்று தீர்மானித்துக் கொள்கிறாள்.

இப்பொழுதெல்லாம் பாலுவுடன் கதைப்பது அவளுக்குச் சகஜமாகிவிட்டது. பாலுவும் அவர்கள் வீட்டிற்குச் சென்று அவளுடன் பொழுதுபோக்காக உரையாடுவான். அவள் தன் மனக்குறைகளையும் துன்பங்களையும் அவனுக்கு மனம் திறந்து எடுத்துக் கூறுவாள். அவனும் அவளின் நிலையுணர்ந்து அவளின் மனத்துயரை நீக்கும்படியான அன்பு வார்த்தைகளினாலும், ஆறுதல் மொழிகளினாலும் கூறி அவள் மனத்துயரை நீக்குவான். அவளின் மனச் சாந்திக்கும் மனச் சந்தோஷத்திற்கும் அவன் நட்பு மிகவும் உறுதுணையாயிருந்தது.

பாலு தன்மீது இவ்வளவு தூரம் அன்புவைத்திருப்பதை நினைத்து நினைத்து பெருமிதத்தாலும் மகிழ்வாலும் அவள் உள்ளம் கனியும். அவனின் வசீகரமான பேச்சு அவளுக்குப் பிணி தீர்க்கும் மருந்தாயிருந்தது. தன் மீது கொண்டிருக்கும் அளவு கடந்த அன்பிற்குத் தான் என்ன கைமாறு செய்ய முடியுமோ என்று அவள் ஏழை உள்ளம் ஏங்கித் தவிக்கும்.

பாலுவுக்கும் சந்திராவின் வீட்டிற்குப் போகாமலிருந்தால் அவனுக்கு மனநிலை நிறைவில்லாமலிருந்தது. அவள் உள்ளத்திலும் பாலுமீது கொண்டிருந்த அன்பும் மதிப்பும் நாளுக்குநாள் வளர்ந்துகொண்டேதான் செய்தது.

ஜெயத்தின் அன்புக் கடிதங்களுக்கு இல்லாத காந்த சக்தி பாலுவுடன் உரையாடுவதில் அவளுக்கு ஏற்பட்டிருந்தது!

கருங்கற்பாறையிலிருந்து பசுந்தளிர் துளிர்விடும் போது...... சந்திராவின் மனம்தான் என்ன இரும்பா? இல்லை, கல்லா?

உலகத்தின் ஆசாபாச உணர்ச்சிகளைத் தேக்கி நிற்கும் வெறும் உணர்ச்சிக் கும்பல்தானே மனித உள்ளம்

பாலுவின் தொடர்பை அடியோடு துண்டித்துக் கொள்ள ஏன் தயங்கவேண்டும்? அப்படி நினைத்துக் கொண்டாலே அவள் உள்ளம் ஏன் வேதனைப்பட வேண்டும்?

அவனுடன் சிரித்துச் சிரித்துப் பழகியதால் ஏற்பட்ட ஒருவித பந்தமா? இல்லை, ஒருவித பாசமா? இல்லை... அது ஏன்?

அந்தக் கேள்விக்குத்தான் அவளால் பதில் காணமுடியவில்லையே!

ஒன்றின் அழிவிலிருந்துதானே இன்னொன்று தோன்ற முடியுமென்னும் பொழுது... ஜெயம் மீது கொண்டிருந்த அன்பு...

ஆனால் பாலுவின் தொடர்பு...

★

இரவு எட்டு மணியிருக்கும். அவளுக்குத் துணையாக அந்த ஏழு வயதுப் பாலகன். அவன் நன்றாகத் தூங்கிக் கொண்டிருக்கிறான். பாலு வழக்கம்போல் அவர்கள் வீட்டிற்குச் செல்கிறான்.

சந்திரா நீட்டி நிமிர்ந்தபடியே துயின்றுகொண்டிருக்கிறாள்

சாளரத்தினூடே வந்த சந்திரனின் ஒளிக் கற்றைகள் அவளின் இளமைக்கு மெருகூட்டிக்கொண்டிருந்தது.

தவழ்ந்து விளையாடும் தென்றலில் அவளின் ஆடைகள் அங்கு மிங்கும் அசைந்தாடிக் கொண்டிருக்க...

அவன் உள்ளம்...

''சந்திரா!'' என்ற அவன் அழைப்புக் கேட்டுத் துடித்து எழுந்து விடுகிறாள். அவள் முகம் நாணத்தால் சிவந்து கொள்கிறது.

நிமிர்ந்து பார்க்க முடியாமல் அவன் முன் நாணிக் குறுகி நின்றுகொண்டிருந்தவள் அவ்விடத்தை விட்டு மறைய விரும்புகின்றாளா:

அவன் தன்னை மறந்தான்!

பாலு அவளை சடுதியாகப் பற்றி இழுத்து அணைத்துக் கொள்கிறான்.

அந்தப் பிடியிலிருந்து விலகிக்கொள்ள அவள் திணறினாள். ஆனால்...

★

இளைபரப்பிப் பசுமை கொழிக்க நின்ற அந்தக் காதல் விருட்சத்தின் மீது பாலு என்ற குருவிச்சை தாவிப்படர்ந்து நாளுக்கு நாள் சிறிது சிறிதாக அந்த மரத்தின் சீவசத்துக்களை உறிஞ்சி அந்த மரத்தை...

★

ஒருசில விநாடிக்குள்ளேயே எதிர்பாராத விதமாக மின்னல் வேகத்தில் அவள் வாழ்வில் மாசு கற்பிக்கப்பட்டுவிட்டதை அவள் எப்படித்தான் தாங்குவாள்?

ஜெயத்தின் களங்கமற்ற அன்புக்குத் துரோகமாக நடந்துவிட்டதை நினைத்து அவள் உள்ளம் வேதனையால் துடித்தது.

ஜெயத்தை உள்ளத்தால் நேசித்தாள். ஆனால் பாலுவை உள்ளத்தாலும் உடலாலும்...

ஜெயத்தின் அன்புக்குத் துரோகமாக நடந்துகொண்டபின் அவன் தொடர்பைத் தொடர அவள் மனச்சாட்சிதான் இடங்கொடுக்குமா? அவன் தொடர்பை அடியோடு துண்டித்துக்கொண்டாள்.

நாம் நினைத்தபடி யெல்லாம் நடப்பதுமில்லை. நமக்கு நடப்பதெல்லாம் நாம் நினைப்பதுமில்லையென்பது உண்மை [illegible] அனுராதபுர ரயில் விபத்தில் [illegible] பலியென்ற செய்தி எங்கும் பரவியது.

சந்திரா துடித்தாள், பதைத்தாள். பாலுவும் அந்த வண்டியில்தானே பிரயாணமானவன்!

ஐயோ! கடவுளே! அந்த செய்தியை அவளால் எப்படித்தான் தாங்க முடியும்? பாலுவும் விபத்தில் பலியானான!

அவள் வாழ்வில் எதையும் மறைத்துவிடலாம். ஆனால் அவளிடத்தில் வளர்ந்து கொண்டிருக்கும் சிசுவுக்கு அவளால் பதில் கூறத்தான் முடியுமா?

பாலுவின் நட்பினால் அவள் உள்ளத்தில் ஏற்பட்ட சபலம்-அதனால் அவள் வாழ்வில் ஏற்பட்ட களங்கம்-அதன் முடிவு ... அதோ! அந்தக் கனத்த காரிருளில் ...

கல்லென்றும் முள்ளென்றும் காரிருளென்றும் பாராமல் அங்கே அப்படி எங்கேதான் ஓடிக் கொண்டிருக்கிறாள்!

அவள் அந்தச் சந்தியைக் கடந்து அந்தப் பச்சைப் பசேலென்ற பரந்த வயல் வெளியை நோக்கி ஓடுகிறாள்.

வேகமாகச்சென்றுகொண்டிருந்த கார் 'கிரீச்' என்ற சத்தத்துடன் நின்று விடுகிறது. காரின் வெளிச்சத்தில் அவளின் உருவம் துலாம்பரமாகத் தெரிகின்றது. காரில் வந்துகொண்டிருந்த இளைஞனுக்கு அவளைக் கண்டதும் உள்ளமும் உடலும் மின்சாரத்தால் தாக்குண்டது போன்ற உணர்வு.

அதோ அவன் அவளைத் துரத்திச் சென்றுகொண்டிருக்கின்றான். இந்த உலகத்தில் அவள் மேல் பச்சாதாபப்பட, பரிதாபப்பட அவன் யார்?

தூரத்தில்தெரியும் அந்தப் பாழும் கிணறுதான் எத்தனையோ பேரின் உயிரை ஏப்பம்விட்டதாயிற்றே!

நிறைவில்லாத மனிதனின் மனம்போல் அதன் கோரப் பசி இன்னும் தீரவில்லையோ என்னவோ. அது தனது அகன்ற வாயைத் திறந்துகொண்டு அவளையும் வரவேற்றுக்கொண்டு இறுமாந்து நிற்கின்றது.

அவள் அந்தக் கிணற்றை நெருங்கிவிடுகிறாள். இல்லை... அவள் வாழ்வின் முடிவையே நெருங்கிவிட்டாள்.

அவன் பிடியிலிருந்துபறித்துக்கொண்டு ஓடத்தினறுகிறாள். விசர் நாய் போலப் பற்களால் அவன் கரங்களில் காயத்தை உண்டுபண்ணிவிட்டாள். ஆனாலும் அவன் இரும்புப்பிடி தளரவில்லை.

''சந்திரா! இங்கே பார். என்னைத் தெரியவில்லையா?'' என்ற அவன் குரல், இதயத்தைக் கிழித்துச் சென்று வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியதுபோல் அவள் நெஞ்சைக் குடைந்து சித்திரவதை செய்தது.

''ஐயோ! ஜெயம்! நீங்களா...? இந்தப் பாவியை நீங்கள் பார்க்கக்கூடாது. நீங்கள் பாக்கவேகூடாது'' என்று கதறிக்கொண்டே முகத்தைப் பொத்தினாள்.

''ஐயோ! ஜெயம்! உங்கள் துரோகி நான். நான்......'' என்று அலறிக்கொண்டவள், மின்னல் வேகத்தில் அவன் கரங்களிலிருந்து பறித்துக் கொண்டாள்.

''சந்திரா! நில்...நீ சாகக்கூடாது'' என்று கதறிய வண்ணம் பின் தொடர்கிறான், ஜெயம்.

அந்த வயல் வெளியில் கட்டி எழுப்பப்பட்டிருந்த அந்த வரம்பு அவளைத் தடுக்கிக்கீழே விழுத்தியிருக்காவிட்டால்......

''சந்திரா!''-அவன் எழுப்பிய குரல் அந்த அகண்ட வெளியெங்கும் எதிரொலித்தது. கிணற்றுள்ளிருந்து கிளம்பிய 'கிளுக் கிளுக்' என்ற அந்தச் சிறிய ஒலி, இந்த எதிரொலிக்குத் தாக்குப்பிடிக்காமல் செத்துக் கொண்டிருந்தது.

சந்திராவைக் காணோம்.

ஜெயம் இன்னும் தேடி அலைந்துகொண்டிருக்கிறான்! அந்த வெளிப்பரப்பில் இன்னமும் ''சந்திரா'' என்று அவன் கூப்பிடும் குரல் ஒலித்துக்கொண்டேயிருக்கிறது!

(யாவும் கற்பனை)

# அருள்வாய் தாயே!

--தீமிலை மகாலிங்கம்--

உன்னைநம்பி யுயிர்வளர்க் கின்றேன்
உத்தமிபல சித்துபகாரி
என்னையீன்று புறம்புகவிட்ட
எந்தையென்னை யிதஞ்செய வொண்ணு
சொன்னயமிகு அன்னதகாதை
தூயசெஞ்சொற் கவிதைபலவும்
சின்னவன்செய உன்னிடு கின்றேன்
தேவிநீ இவைதந்தருள்வாயே!

மண்ணினுசை மயக்குருவான
வண்ண வண்ண வகைகளினுசை
எண்ணுசிந்தையி லேறிடும்போது
என்செய்வே னுனையெண்ணுவதில்லை
கண்ணிருந்தும் குழியினில் விழும்
காதைபோன்று கருத்தை யிழந்தேன்
என்னசெயினு மன்னைநீ யென்னை
ஏற்றுநின்னருள் தந்திடுவாயே!

போற்றுகின்ற தமிழின்கவிதைப்
போக்கிலே மனம் நோக்குதலுற்று
ஆற்றொணுவகை அன்பர் தொடர்ந்து
ஆதரித்தெனை யாக்கிடநீயும்
காற்றினின்மரக் கீற்றினி லெங்கும்
கண்சிமிட்டிக் கவிதர வேண்டும்
ஏற்றுநானதை *ஏட்டிடல் வேண்டும்
என்னையீன்ற இயற்கையின் தாயே!

*ஏட்டிடல்=ஏட்டில் எழுதல்.

# நிலக்கரி முட்டை!

தமிழ்நாட்டில் நெய்வேலியில் 'லீகோ' நிலக்கரிக்கட்டிகள் தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு வந்திருக்கின்றன அல்லவா? ஜெர்மனியில் எஸ்ஸென் நகரில் சுரங்கத் தொழில் ஆராய்ச்சிநிலையத்தில் கடந்த இரண்டாண்டு காலமாக ஆராய்ச்சிகள் நடத்திய 70 இரசாயன, பௌதிக விஞ்ஞானிகள் இஞ்சினியர்கள் ஆகியோர் சேர்ந்து, கரிக்கட்டித் தயாரிப்பில் புரட்சி செய்துள்ளனர். நிலக்கரிகட்டியை முட்டை வடிவில் தயாரித்துள்ளனர். இதற்கு முன்னர் நிலக்கரி தயாரிக்க பெரிய தொழிற்சாலைகள் தேவையாக இருந்தன. இந்த விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ள புதிய முறையின் மூலம் 'நிலக்கரி முட்டைகள்' தயாரிக்க சிறிய தொழிற்கூடம் இருந்தால் போதுமானது. நிலக்கரியைத் தூளாக்கி உஷ்ணப்படுத்தி, முட்டை வடிவில் நிலக்கரிக் கட்டிகள் தயாரிக்கிறார்கள். நிலக்கரி முட்டை நீடித்து நின்று எரிந்து அதிகமான வெப்பம் தரக்கூடியது.

வடமாகாணத்தில்
இரவு - பகல் சேவை செய்யும்
ஒரே ஒரு
ஸ்தாபனம்
உவாட் அன் டேவி
( ஆங்கில மருந்துச்சாலை )
148, நாவலர் வீதி, — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சண்டேசுரர் வணக்கம்

சிவபெருமானுடைய கோவிலின் சொத்துக்களை உரிமையோடு பாதுகாத்துப் பரிபாலிப்பவர், சண்டேசுரநாயனார். ஆதலால், அவரைத் தொழும்போது, இரண்டு கைகளையும் தட்டுவது, அர்த்தமற்றசெயலாகும். அவர் யோகத்தில் இருப்பதால் அவரைத்தட்டி நம் வரவைக் கூறுவது என்பதும் தவறான கொள்கை.

அதை எப்படிச் செய்ய வேணும் என்ருல், 'சிவன் கோவிலிலிருந்து என் இடது கையில் ஒட்டிக்கொண்டிருக்கும் திருநீற்றைத் தவிர, வேறு எந்தப் பொருளையும் நான் எடுத்துச் செல்லவில்லை. இதோ இந்த ஒட்டிய திருநீற்றையும், வலது கையால்நீக்கிவிடுகிறேன்' என்று சொல்லி இடது கைமீது வலது கையை மும்முறை தடவ வேண்டும் இதுதான் சண்டேசுரரை வணங்கும் உண்மை வழியாகும்

— திருவாசகமணி

# விடுதலை விண்ணப்பம்

—5—

### 41. சிவனே முறையோ முறையோ

முதலைச்செவ் வாய்ச்சியர்
வேட்கைவெந் நீரிற்
கடிப்பமூழ்கி
விதலைச்செய் வேனை விடு
திகண் டாய்விடக் கூன்
மிடைந்த
சிதலைச்செய் காயம்;
பொறேன்சிவ னேமுறை
யோமுறையோ
திதலைச்செய் பூண்முலை
மங்கைபங் காஎன்
சிவகதியே.

தீராத காமவிச்சை என்னும் வெந்நீரினால் சிவந்த வாயினுடைய மகளிர் பற்றியதைவிடாத முதலை போன்றவர்கள் அத்தகைய முதலைகள் கடிக்கும்படியாக காமவின்பம் என்னும் துன்பக் கடலுள் மூழ்கித்தவிக்கின்ற தமியேனை, சிவபரம்பொருளே! கைவிடாதீர். புலால்நாற்றம் வீசும் மாமிச பிண்டமாய் நோய்க்கு இடமளிக்கும் இவ்வுடலை இனித் தாங்கமாட்டேன். தேமல் படர்ந்த, பரஞானம், அபரஞானம் என்னும் தனபாரங்களைக்கொண்ட எம் அன்னை பங்காளரே! அடியேனது சிவகதியானவரே! இவ்வேழையை இன்னமும் சோதிப்பது முறையாகுமோ?

### 42. சடாமுடி மன்னவர்

கதியடி யேற்குன் கழல்
தந்தருளவும்
ஊன்கழியா
விதியடி யேனை விடுதிகண்
டாய்வெண் தலை
முழையிற்
பதியுடை வாளரப் பார்த்
திறை பைத்துச் சுருங்க
அஞ்சி
மதிநெடு நீரிற் குளித்
தொளிக் குஞ்சடை மன்ன
வனே.

பிறைச்சந்திரனைக் கண்டு அதனைக் கவரும்படி படமெடுத்த பாம்பானது இறைவனது திருமுகத்தைப் பார்த்தமாத்திரத்தே படத்தைச் சுருக்கிக்கொண்டு மலையாகத்தொங்கும் பிரமகபாலங்களையே மலைக்குகையாக நினைத்து அவற்றின் உள்ளே புகவும்; பாம்பைக்கண்டு பயந்த பிறைச்சந்திரன் கங்கை நதியில் மூழ்கி ஒழிக்கவும் அவற்றைச் சடாமுடியில் தரித்த மன்னவனே! உமது திருவடிகளை எனக்குப்புகலிடமாகத்தந்து அருள் புரியவும். அணைப் பற்றிக்கொள்ளாது ஊன் பொருந்திய இவ்வுடலைச் சுமக்கும்படி அடியேனைக்கை விடாது காத்தருளுக.

### 43. முன்னவனே பின்னும் ஆனவனே!

மன்னவனேயொன்று
மாறறி யாச்சிறி யேன்
மகிழ்ச்சி
மின்னவ னேவிட் டிடுதி
கண் டாய்மிக்க வேத
மெய்ந்நூல்
சொன்னவ னேசொற்
கழிந்தவ னேகழி யாத்
தொழும்பர்
முன்னவ னேபின்னும்
ஆனவ னேயிம் முழு
தையுமே.

வேதம் முதலாகிய மெய்ப் பொருள் நூல்களை ஆன்மாக்

**க. வை. ஆ. சர்மா**

கள்பொருட்டுச் சொல்லியருளியவரே! சொற்பதங் கடந்த சோதிவடிவானவரே பின்னும் தேவரீரைப்பற்றி விடாத அடியவர்முன்னின்று காப்பவரே! ஆனந்த நடராசரே பின்னும் இப்படைப்பு முழுதும் ஆனவரே! களிப்பைத்தரும் மின்போன்ற ஒளியாய் உள்ளவரே! நான் என்ற ஒரு பொருள் தேவரீரைவிட வேருக உள்ளது என்ற உணர்ச்சி (தற்போதம்)பற்றுக்கலந்துநிற்கும்வகை அறியாத சிறுமையுடையேனைக் கைவிடாது காத்தருளுக.

### 44. உடையாய் உன்னைப்பாடுவன்

முழுதயில்வேற்கண் ணிய
ரென்னும் மூரித் தழல்
முழுகும்
விழுதனை யேனை விடுதி
கண் டாய்நின் வெறி
மலர்த்தாள்
தொழுது செல்வான் நற்
றொழும்பரிற் கூட்டிடு
சோதியெம்பிரான்
பழுதுசெய் வேனை விடே
லுடை யாய்உன்னைப்
பாடுவனே.

கூரிய வேல் போன்ற கட்பார்வையினையுடையமகளிர் என்னும் வலிய தழல் முழுவதிலும் புகுந்து நெக்கு உருகும் வெண்ணெய்க்கட்டி போன்ற தமியேனைப் பெருமானே கைவிடாது காத்தருளுக. தேவரீரது நறுமணங்கமழும் மலர்போன்ற திருவடிகளைத் தொழுது முத்தி நெறிப்படும் பொருட்டு மெய்யடியாருடன் சிறியேனைச் சேர்த்தருளுக. எம் பெருமானே! அறிந்தும் தவறு செய்யும் சிறியேன் நல்லறிவு வரும்போதுஇடையிடையே வணங்கி உம்மைப் பாடுவேன் விட்டுவிடாதருளுக. சோத்து-வணக்கம், (வணங்குகிறேன் - இழிந்தோர் செய்யும் அஞ்சலி)

### 45. சிவனே எவ்விடத்தான்

பாடிற்றி லேன்பணி
யேன்மணி நீயொளித்
தாய்க்குப்பச்சூன்
வீடிற்றி லேனை விடுதிகண்
டாய்வியந் தாங்கலறித்
தேடிற்றி லேன்சிவ னெவ்
விடத் தானெவர் கண்
டனரென்
றோடிற்றி லேன்கிடந்
துள்ளுரு கேன்நின்
றுழைத்தனனே.

மாணிக்கமே! தேவரீரை இடைவிடாது பாட அறியேன்; பணிந்து வணங்க அறியேன்; அதனால், என் கண்ணிற்படாது ஒளித்த தேவரீரைத்தேடாது, பசிய ஊனாலாகிய இவ்வுடலை விட்டுவிடாது பற்றிநிற்கும் அறிவிலியாகிய என்னைக்கை விடற்க. தேவரீரது அளவிடற்கரிய பெருமைகளில் அறிந்தவற்றையாவது வாயாரக்கூறி அலறித்தேடாதிருக்கின்றேன். சிவபரம் பொருள் எங்குள்ளார்? அவரைக் கண்டவர் யார்? என்று ஓடித்தேடி உள்ளம்உருகாது நின்று வருந்துகின்றேன்.

### 4 . மழைதருகண்டன்

உழைதரு நோக்கியர்
கொங்கைப் பலாப்பழத்
தீயினொப்பாய்
விழைதரு வேனை விடுதி
கண் டாய்விடின் வேலை
நஞ்சுண்
மழைதரு கண்டன்
குணமிலி மானிடன்
தேய்மதியன்
பழைதரு மாபர னென்
றென் றறைவன்
பழிப்பினையே.

பலாப்பழத்தைமொய்த்த ஈயானது அதனைவிட்டு நீங்க வழியறியாது மாளுவது போல, மான் போலும் மருண்ட பார்வையுடைய மங்கையரது கொங்கையிடத்தே மனங்கொண்டு மீளவகையறியாது மயங்குவேனைக்கைவிடாதீர். பெருமானே! அப்படி என்னைக் கைவிடுவீராயின் உம்மைப் பற்றி யாவரும் அறியும்படி பாற்கடலிற் தோன்றிய கொடிய நஞ்சை உண்டவன் சூற்கொண்ட மேகம் போன்ற நீலகண்டத்தை உடையவன், குணமில்லாதவன் (குணங்களுக்கு அப்பாற்பட்டவன்), மானிடன் (மானை இடக்கையிலேந்தியவன்), குறைந்த மதியுடையவன் (பிறைசூடி), பழய பெரிய ஆண்டி (பழமையான பெரியமேலோன்) என்று உண்மையான உமது இகழ்ச்சிகளை (இங்கு-பெருமைகளை)ப் பிறரறியும்படி சொல்லிவிடுவேன். இது நிந்தாஸ்துதி- இகழ்ச்சிபோலும், புகழ்ச்சிவணக்கமாம்.

---

# அயல் நாடுகளில் சைவம் -18

# தாய்க் கடவுள் வழிபாடு

**ந.சி.கந்தையாபிள்ளை**

மக்களிடையே ஆதியில் தோன்றியிருந்தது தாய்க்கடவுள் வழிபாடென மனித இயலார் கூறுகின்றனர். இடபத்தின்மீது நிற்கும் தந்தைக் கடவுள் வழிபடப்பட்ட நாடுகளிலெல்லாம் சிங்கவாகனத்தின்மீது நிற்கும் தாய்க் கடவுளும் வழிபடப்பட்டது தாய்க்கடவுள் வழிபாடு மொகஞ்சதாரோகாலத்திலிருந்தது. ஆசியாமைனர் தொடக்கம் பழைய சீரியா, அசிரியா, பினீசியா, பாபிலோனியா, சாலத்தினம், எகிப்து, கிரீஸ், கிரேத்தா (Crete) முதலிய நாடுகளில் பழங்காலம் முதல் இவ்வழிபாடு இருந்தது இதனைத் தொல்பொருளாராய்ச்சி உறுதிப்படுத்துகின்றது. தாய்க் கடவுள் வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு பெயர்களில் வழிபடப்பட்டது இவ்வழிபாடு ஓரிடத்தில் தோன்றிப் பின் பலவிடங்களுக்குப் பரவியிருக்கின்றது. "சமய, அறநெறிக் கலைக்களஞ்சியம் (Encyclopedia of religion and ethics) என்னும் நூலில் கூறப்படுவது வருமாறு:—

"இஸ்தர், ஒரு போர்த் தேவதை அது நெருப்புச் சுவாலையை உடுத்துக்கொண்டும், இடத்தோளில் அம்பறுத்தூணியைத் தாங்கிக் கொண்டும், இடக்கையில் வில்லைப் பிடித்துக்கொண்டும், வலக்கையால் உறையிலிருக்கும் வாளை உருவிக் கொண்டும் காட்சியளித்தது. பாபிலோனியக் கலைமரபில் இத்தேவதை சிங்கம் அல்லது சிறுத்தைமீது நிற்பதாகக் காணப்படுகின்றது. "நான் போர்க்களத்தில் சிட்டுப்போலப் பறக்கிறேன்" என்று அது கூறியதாக ஒரு பாடல் காணப்படுகின்றது. எகிப்திலும் கானான் மக்களும் அஸ்ரரத் தெய்வத்தைச் சிங்கத்தின் மீது நிற்கும் தாய்க்கடவுளாக வழிபட்டார்கள். சௌல் அரசனின் போர்க் கவசம் பாலஸ்தீனத்திலிருந்த ஆஸ்ரரத் தெய்வத்தின் கோவிலில் வெற்றிப் பொருளாக வைக்கப்பட்டது. பினீசியரின் குடியேற்ற நாடாகிய சிதேரியாவில் அதன் உருவச் சிலை கவசம் போர்த்ததாகக் காணப்படுகின்றது. உரோமன் கலையைச் சேர்ந்த அப்பிரடைட்டும், ஆயுதம் தாங்கிய வீனசும் பினீசியமாதிரியைப் பின்பற்றியவை. இரோபொலிஸ் என்னுமிடத்திற் காணப்பட்ட அட்டர் என்னும் தேவதை சிங்கத்தின் மீதிருந்து சவாரி செய்கிறது. அஸ்தாத் என்னும் தாய்க் கடவுள் வழிபாடு பினீசியரிடமிருந்து கிரேக்கரிடையும் உரோமரிடையும் பரவிற்று உரோமைப் போர்வீரர் இவ்வழிபாட்டை இங்கிலாந்துவரை பரப்பினர் என்பதை ஒரு சாசனம் தெரிவிக்கின்றது. பழைய உலகில் காணப்பட்ட இரியா, சிபிலி முதலிய தாய்க்கடவுள் வழிபாடுகள் செமித்தியரின் அஸ்தாத் வழிபாட்டிலிருந்து தோன்றின அல்லது அதன் செல்வாக்கினால் மாறுதலடைந்தன வென்று கூறலாம்."

சிங்கவாகனியாகிய தாய்க் கடவுளின் வடிவங்கள் எகிப்து, கிரேத்தா, ஆசியாமைனர், பாபிலோனியா முதலிய நாடுகளிற் கிடைத்துள்ளன. அவை இந்தியாவில் வழிபடப்படும் துர்க்கை, காளி வடிவங்களை மிக ஒத்திருக்கின்றன. தாய்க் கடவுள் வழிபாடு (சத்திவழிபாடு) மேற்கு ஆசிய நாடுகளில் பெரிதும் காணப்பட்டமையின், அவ்வழிபாடு அவ்விடங்களினின்றும் வந்து இந்தியாவை அடைந்ததெனச் சிலர் கூறியிருக்கின்றனர். இக்கூற்று, இந்திய நாட்டிற் காணப்படும் துர்க்கை வழிபாடு அந்நாடுகளில் பெருவழக்கிலிருந்ததென்பதற்குச் சான்றாகின்றது. எகிப்தியரின் தாய்க் கடவுள் ஆலமர நிழலிலிருந்தது. ஆலமரம் தெய்வ உருவங்கள் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டது.

முருகக்கடவுள் [illegible] றவை சிறுவன் எனக் கூறப்படுவர். மத்தியதரைக் கடலை அடுத்த நாடுகளில் தெற்கே கிரீத் (Crete) வரை ஒரு குமரனையுடைய தாய்க் கடவுள் காணப்பட்டது இத்தாய்க் கடவுளுக்குப் புதல்வனிருந்தபோதும் அது கன்னியாகக் கொள்ளப்பட்டது. குமாரனோடு கூடிய இத்தெய்வம் பியூனிக் ஆப்பிரிக்காவில் தானிட் (Tanit) என அறியப்பட்டது; ஓரஸ் என்னும் புதல்வனையுடைய எகிப்தியரின் தாய்க்கடவுள் இசிஸ் எனவும், பினீசியாவில் தாமுஸ் என்னும் புதல்வனை (ஆரோனிஸ்) யுடைய தாய்க்கடவுள் அஸ்ரோத் எனவும், ஆசியாமைனரில் இதுபோன்ற தெய்வம் சிபிலி எனவும், சியஸ் என்னும் புதல்வனையுடைய இத்தெய்வம் கிரீசில் ரியா (Rhea) எனவும் அறியப்பட்டன. (E of Religion and Ethics)

மனிதனின் முற்பருவத்தில் தந்தையிலும் பார்க்கத் தாயே முதன்மை பெற்றிருந்தாள் பிள்ளைகள் தாயைச்சூழ்ந்திருந்தார்கள் பிள்ளைகள் எல்லாம் வல்ல அடங்கா எல்லா அதிகாரமுடைய ஒரு தாயின் வடிவில் வழிபட்டார்கள். இவ்வழிபாடு மக்கள் மிகக் கீழ்நிலையிலிருக்கும்போது தோன்றியதாதலின், இது மனிதபலி விலங்குப்பலிகளோடு கூடியதாகவிருந்தது. மனிதனுடைய நாகரிகம் படிப்படியே வளர்ச்சியடைந்தபோது, வழிபாட்டின் கோரத்தன்மைகளும் படிப்படியே குறைந்துகொண்டு வந்தன.

பழைய சிரிய நாட்டில் எரா பொலிஸ் பம்பிசி என்னுமிடத்திலிருந்த தாய்க் கடவுள் பெண் சிங்கத்தின் மீதிருக்கும் வடிவிலிருந்தது பாபிலோனில், கிரேக்கரால் ரியா என அழைக்கப்பட்ட தாய்க்கடவுளின் முழங்கால்களில் இரண்டு சிங்கங்கள் நின்றன எகிப்தியரின் சிற்பங்களில் கடிஷ் என்னும் தாய்க்கடவுள் சிங்கத்தின் மீது நிற்கிறது. (Golden Bough) கிரேத்தா (Crete) நாட்டில் வழிபடப்பட்ட தாய்க் கடவுள் சிங்கத்தின் மீது நிற்கின்றது. இக்கடவுளுக்கும் இந்தியரின் கடவுளாகிய சண்டிக்கும் நெருங்கிய ஒற்றுமை காணப்படுவதை "வங்காள மொழியும் இலக்கியமும்" என்னும் நூலில் [illegible] வர் சுட்டிக்காட்டியுள்ளார்.

---

## அழைத்து விடு

காலப் போக்கில் கரைந்து
கனவாய் முடியும் இவ்வாழ்வு
ஞால வீதில் உரைகல்லாய்
நன்றே நிலைக்கா நலிவுற்று
வாலப் பருவம் மறைந்தொழிய
வலதும் குன்றி நரைபரவ
கோலம் கையில் துணையோடு
குடுகுடு நடைதான் துணையாகும்

ஃ ஃ ஃ

கூனல் முன்னே தள்ளிவிடும்
கூந்தல் கீழே சொரிந்துவிடும்
மானம் எங்கோ பறந்தோடும்
மண்ணில் இடத்தை மனம்நாடும்
தானம் மறைந்து தள்ளாடி
தடி வழியைத் தேடிவிழும்
ஏனும் பிறவி இவ்வுலகில்
எடுத்தேன் இறைவா அழைத்துவிடு.

—ஆலன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### சமஸ்கிருத மறுமலர்ச்சிக்கு சக்தி வாய்ந்த அறைகூவல்

# சாஸ்திரிய முறைப் படிப்பும், நவீன முறையும் இணைய வேண்டும்

(சென்ற வாரத்தொடர்ச்சி)

இவற்றை நாம் செய்வோமானால், பண்டிதருக்கும் பேராசிரியருக்குமிடையேயுள்ள பேதம் நாளடைவில் மறைந்துவிடும். ஏனெனில் இவர்கள் இரு தப் படிப்பு முறைகளினதும் நல்ல அம்சங்களைக் கிரகித்திருப்பர். இந்த இணைப்பு இந்தியாவிலேயே ஏற்பட முடியும். ஏனெனில், இங்கு சாஸ்திரிய முறை இன்னும் உயிருடன் இருக்கின்றது. அதே நேரத்தில், நவீன முறையும் நாட்டில் வேரூன்றிவிட்டது.

உடனடி நடவடிக்கையாக, சாத்திரிய முறைப் படிப்பில் நவீன பாடங்கள் புகுத்தப்படவேண்டும். உயர்ந்த கட்டத்தில் விமர்சக, சரித்திரப் படிப்பும் புகுத்தப்படவேண்டும். சாஸ்திரிய முறையில் படித்துப் பட்டம் பெற்றவர்களுக்கு அப்போதுதான் பல்கலைக்கழகப் படிப்புப் பெற்றவர்களுக்குக் கிடைக்கும் உத்தியோக வாய்ப்புக்கள் கிட்டும்.

பழைய போஷகர்கள் போய்விட்டார்கள்; மத்திய அரசாங்கமோ எட்டத்தில் இருக்கிறது. சாஸ்திரிய முறைக் கல்வியைப் பாதுகாக்கும் பொறுப்பு பிரதேசங்களைச் சார்ந்ததாகும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, எமது நாட்டின் பண்பாட்டையும், அப்பண்பாட்டின் சக்தியையும் ஒளி குன்றாது பாதுகாக்க, சாஸ்திரிய முறைக் கல்வியைத் தொடர்ந்து நிலைநாட்டுவது மக்களின் பொறுப்பாகும்''

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் பிரிட்டிஷ் ஆட்சியாளரால் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டசமயம், இரண்டாவது பிரதான மொழி என்ற ரீதியில், நாட்டின் புதிய கல்விச் சமூகத்தினருக்கு சமஸ்கிருதம் உற்சாக மூட்டும் ஆதாரமாக விளங்கியது. இது சக்தி வாய்ந்த பண்பாட்டு வளர்ச்சிக்கு வழிகோலியதுடன், மேற்குத் தேயப்பண்பாட்டின் புத்துணர்ச்சியூட்டும் தொடர்பினால் நவீன இந்திய மறுமலர்ச்சிக்கு வித்திட்டது.

எமது பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள், உயர்நிலைப்பள்ளிக்கூடங்கள் பலவற்றிலும் இன்று சமஸ்கிருதம் கற்பிக்கப்படுகிறது. பத்தாயிரம் பேருக்குக் குறையாதவர், சமஸ்கிருதத்தையே வாழ்க்கை முழுவதும் படிக்கின்றனர். அதைத் தமது வாழ்க்கை ஆதாரமாகக் கொண்டுள்ளனர். நாட்டில் 50,000க்கும் குறையாதவர் அதை வளத்துடன் பேசுகின்றனர். மதகுருத் தொழிலைப் பின்பற்றும் நூறுயிரக்கணக்கானவர் மக்களைக் கடவுளின் அருகில் கொண்டு செல்ல உதவுகின்றனர். முப்பதுகோடிமக்களின் வாழ்க்கையில் பிறப்பு, திருமணம், இறப்பு சம்பவங்களில் பிரார்த்தனையிலோ அல்லது சடங்குகளிலோ, சமஸ்கிருதத்தின் புனிதமான இனிமை நிறைந்த சொற்கள் எதிரொலிக்கின்றன.

நாட்டிலே 35 கோடி மக்களினால் பேசப்படும் பல்வேறு மொழிகளும் சமஸ்கிருத மொழியினால் வளம் பெறுகின்றன.

நாட்டின் தேசிய வாழ்க்கையில் குறிப்பிடும் வகையில் ஈடுபட்ட பெருந்தலைவர்களின் சுயஆத்ம நிறைவுக்கு சமஸ்கிருதமும், அது எந்தக் குறிக்கோள்களைப் பிரதிபலிக்கிறதோ அக்குறிக்கோள்களும் உதவிசெய்துள்ளன.

சமஸ்கிருதமும் பாளியுமே இந்தியாவைத் தென்கிழக்கு ஆசியா, சீனு, ஜப்பான் ஆகியவற்றுடன் இணைக்கும் பண்பாட்டுப் பாலமாக விளங்குகின்றன.

பரம்பரை அல்லது சாஸ்திரிய வழியில் சமஸ்கிருதம் படிக்கும் முறைக்குப் பின்னால் பெரிய பாரம்பரியமே இருக்கிறது. அது சமஸ்கிருதம் மூலம் எமது பண்பாட்டின் தொடர்ச்சியை நிலைநாட்டுவதில் பெரிய சேவைகளை ஆற்றியுள்ளது. அதன் மூலமே உலக சிந்தனைக்கும் பண்பாட்டுக்கும் இந்தியாவின் பங்கு கிடைத்துள்ளது. இந்தியாவின் அறிவு வளர்ச்சிக்கும், ஆத்மீக வளர்ச்சிக்கும் அது இன்றியமையாததாகும்.

இப்பொழுது கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் போதிக்கப்பட்டு வரும் நவீன முறைச் சமஸ்கிருதப்படிப்பு பிரிட்டிஷ் காலத்தில் புகுத்தப்பட்டதாகும்.

விமர்சக முறையினை அதிகம் அனுசரிக்கும் நவீன சமஸ்கிருதக் கல்வி முறை, சமஸ்கிருதப் படிப்பை படைப்பிலக்கியத்திலிருந்து மறைந்துபோன ஒரு பண்பாட்டின் செத்துப்போன ஓர் இலக்கியத்தின் மீது நடாத்தப்படும் பிரேத விசாரணையின் நிலைக்குக் கொண்டுவந்து விடுகின்றது.

இந்த இரண்டு முறைச் சமஸ்கிருதப் படிப்பும் சில சிக்கலான பிரச்னைகளை உண்டாக்கியுள்ளன. நாட்டின் புதிய வாழ்க்கையில் தாம் ஆற்றவேண்டிய பங்கினை ஆற்றவிடாது, சாஸ்திரிய முறை மாணவர்களை இது தடுக்கிறது. இம்மாணவர் தொகை நாளுக்கு நாள் பெருகிவருகிறது.

மத்திய அரசாங்கமும் மற்றும் பிரதேச அரசாங்கங்களும் போதிய அளவு ஆதரவு இவ்விஷயத்தில் அளிக்கவில்லை.

வாழ்க்கை முழுவதும் சமஸ்கிருதத்தைப் படித்த ஒரு பண்டிதர், சமஸ்கிருதத்தில் எம். ஏ. பட்டம் பெற்றவரிலும் குறைவாகவே மதிக்கப்படுகிறார். ஏனெனில், பின்னவர் நவீன பல்கலைக்கழகங்களின் முத்திரையைப் பெற்றவராதலால்.

இந்தியாவின் சரித்திரத்தை நாம் பாதுகாக்க வேண்டுமானால், சாஸ்திரிய முறைச் சமஸ்கிருதப் படிப்பை நாம் ஒதுக்கிவிட முடியாது.

விமர்சக, சரித்திர ஆராய்ச்சியில் எவ்வளவு தூரம் பயின்றவர்களானாலும், நவீன முறைச் சமஸ்கிருதப்படிப்பின் வாரிசுகள், நாட்டின் மகத்துவத்தை உணரவும் அதனின்றும் ஊக்கம் பெறவும் அவசியமான அந்த ஆழ்ந்த நூல் அறிவைப் பெறுவது துர்லபமே.

இந்த இரண்டு முறைப் படிப்பும் ஒன்றாக இயங்குவதனால், இரண்டிலுமுள்ள நல்ல அம்சங்கள் இணைக்கப்படவேண்டும். அதற்குத் தேவையானவை!

(1) நாடு முழுவதும் ஒரே மாதிரியான அடிப்படைச் சமஸ்கிருதக்கல்வி இருக்க வேண்டியதுடன், சாஸ்திரிய முறைப்படிப்பின் சில அம்சங்களும் பொருந்தியதாகவும் இருக்கவேண்டும்.

(8ம் பக்கம் பார்க்க)

# பல்லவர்காலமும் பக்திக்கோலமும்

(சென்ற வாரத்தொடர்ச்சி)

### வர்க்கப்போராட்டமல்ல

பழைய தமிழர் தம்வாழ்க்கையுடன் ஒன்றித்திருந்த தமிழ்ச் சமய நெறியை புதுமெருகுடன் மீண்டும் நிலைநாட்ட எழுந்த பக்தி இயக்கத்தை வர்க்கப்போராட்டத்தின் விளைவு என்றும் பொருளாதார மோதல்களின் அடிப்படையில் தோன்றியதெனவும் நாஸ்திகவாதத்தைச் சிலர் கூறுவர்.

இவர்கள் வணிகவர்க்கத்தினராகிய சமண பௌத்தர்க்கும், நில உடைமைக்காரர்களும் உழவர்களுமாகிய வைதிகசமயத்தவர்க்குமிடையில் ஏற்பட்ட பொருளாதாரப் போட்டியின் விளைவே, தேவார திருவாசக திவ்யப்பிரபந்தங்கள் என்று கூறுவர்.

கோயிற் புனருத்தாரணத் தொண்டையே அப்பர் சுவாமிகள் மேற்கொண்டார் அதன் அடியானதே அப்பரின் உழவாரத் தொண்டு.

சமணர்களை வணிகர்களாகக் கூறுகின்றவர்கள் அதே சமணர்கள்தான் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களிலே செல்வ நிலையாமையைக் கூறியுள்ளனர் என்பதை மறந்துவிட்டனர்.

பல்லவர் காலத்தில் மகாபலிபுரம், காவிரிப்பூம்பட்டினம் கொற்கை ஆகிய பகுதிகளில் வணிகம் நடாத்தியவர்கள் வைதீகராயுமிருந்ததற்குச் சாசனச் சான்றுகள் உண்டு. தமிழர்கள் சங்க காலத்தில் பிறநாட்டு வணிகத்தில் சிறந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. எனவே சமணர்தான் வணிகர் என்று வரையறுத்து முடிவுகட்டலாகாது.

சங்ககாலத்தின் பின்பு பல்லவர் காலம்வரை வணிகர்கள் சமண நெறிப்படியே வாழ்ந்தனர் எனக் கூறமுடியாததற்கு கோவலனின் திருமணம் சிலப்பதிகாரத்தில்,

''நீல விதானத்து
நித்திலப்பூம் பந்தர்க்கீழ்
வானூர் மதியஞ் சகடணைய
வானத்துச்
சாலி யொருமீன்
தகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பனன்
மறைவழி காட்டிடத்
தீவலஞ் செய்வது காண்
பார்கண்ணோன்பென்னை''

என அமைந்தது சான்றாகும். வைதீக முறைப்படியே திருமணம் நடக்கிறது.

எனவே பொருளாதார வேறுபாடுகள் சமணர், பௌத்தர், வைதீகர் என்ற

— க. நவசோதி —

வேறுபாட்டைஏற்படுத்தாததும், வர்க்கப் போராட்டம் பக்திப் பாடல்களுக்கு ஆதாரமாய் அமையாததும் இவற்றின் மூலம் தெளிவாகின்றது.

### மன்னரின் பக்திக் கோலம்

பல்லவ நாட்டையே ஆட்டிவைக்கும் சமுதாய இயக்கமாக மாறிய பக்தி இயக்கம் பரசமய இருளில் மூழ்கிக்கிடந்த மன்னர்களையே பக்திக் கோலம் பூணவைத்தது.

பல்லவ மகேந்திரவர்மனை அப்பர் அடிகளும் பாண்டிய நெடுமாறனை சம்பந்தரும் மீண்டும் சைவராக்கினர். பல்லவ நாடு மட்டுமன்றி பாண்டிநாடும் பக்திக் கோலம் பூணுவதற்கு இது வழிவகுத்தது. மன்னரும் மதம் மாறவே குடிகளும் உற்சாகத்துடன் அவர் வழியில் பக்திமார்க்கத்தில் தீவிர பற்றுடையவர்களாய் மாறினர்.

சமண, பௌத்த எதிர்ப்புக்கள் நீக்கப்பட்டு இந்து மத வளர்ச்சி துரிதமாக்கப்பட்டது. மன்னர் அவையிலேயே சமயக் கருத்தரங்குகள் இடம் பெற்றன. மன்னரின் ஆதரவில் நிகழ்ந்த பூர்வமான ஆதரவை பக்தி மார்க்கம் பெற்றது.

### பக்திக் கலைகள்

மன்னரும் மக்களும்மட்டுமன்றி மன்னரவையிலும் மக்கள் மனைகளிலும் மன்றுகளிலும் இடம்பெற்ற தமிழர்கலைகளெல்லாம் பக்திக் கோலம் பூண்டன..

நாயன்மார்களினதும் ஆழ்வார்களினதும் தேவார திருவாசக திவ்யப்பிரபந்தங்கள் இசைஇலக்கியங்களாக, இசைப்பாடல்களாக பாடப்பட்டன. பக்தி உணர்ச்சியின் வளர்ச்சியில் பத்துப் பத்துப்பாடல்களாக பதிகங்களைப் பாடிக்கொண்டே கோயிலைச் சுற்றி வந்தனர் சம்பந்தரின் பாடல்களை நீலகண்ட யாழ்ப்பாணர்யாழில் இசைத்துப் பாடினர். மக்களின் நாட்டுப்பாடல்களின் இசை தேவார திருவாசகங்களைப்பாட உதவின.

பக்திப் பாடல்களினால் தலங்கள் மகிமை பெற்றன. தலங்களின் எழுச்சியிலே பக்திப்பாடல்களும் பல்கிப் பெருகின உலகில் பிறமொழிகளில் இல்லாத முறையில் கல்நெஞ்சையும்நெகிழவைக்கும் திருவாசகப் பாடல்கள் எழுந்தன தமிழிலக்கியமும் செல்வவளம் பெற்றது.

இசையுடன் நடனமும் ஒன்றித்து வளர்ந்தது. இறைவனுக்கே நடன உரு அமைக்குமளவிற்கு இறையம்சம் பெற்று நடனக்கலை கோயிலிலேயே வளர்ந்து வந்தது. தமிழரின் வெறியாடல் புதிய உருவைப் பல்லவர் காலத்தில் இவ்வாறு பெற்றது. அடிகள்மார், கணிகையர் போன்றோர் நடனக்கலைக்குரியவர்களாக இறைபணி செய்தனர்.

ஒருநாமமும் ஒருருவுமற்ற இறைவனுக்கு ஊர்தோறும் உருசமைத்து கோயில் எழுப்பினர்கள். பெருமாள் கோயில், கைலாசநாதர் கோயில் என்பன சிறப்பிடத் [illegible] கைவயத்தின் வளர்ச்சி யின் கொடுமுடியாக சோழர் காலம் திகழ்ந்ததற்குப் பல்லவர் காலமே வித்தாக அமைகின்றது. நிழல்கிழா தஞ்சைக் கோபுரங்களும், சைவர்களின் பேரிலக்கியமாக பெரிய புராணமும், நாயன்மார் தலங்களும் எழுவதற்கு பல்லவர் காலமே வித்தாக அமைகின்றது.

இறைபணி செய்யும் ஒரு சமுதாயம் சோழர் காலத்தில் சிறந்து விளங்கினால் அதன் ஆரம்பத்தினைப் பல்லவர் காலத்திலேயே காண முடிகிறது

நாயன்மார்களின் தேவார திருவாசகங்களை நம்பியாண்டார் நம்பி திருமுறைகளாகத் தொகுப்பதற்கும், ஆழ்வார்களின் பாடல்களை திவ்யப் பிரபந்தங்களாக நாதமுனி தொகுப்பதற்கும், பக்திப் பாடலாம் செல்வத்தையே வழங்கிக் காரணமாக இருந்தது பல்லவர் காலமே.

இத்தகைய பாடல்களை வெறும் பிரச்சாரம் என்று அறியாது ஒதுக்கும் அறிஞர் கூட்டமும் உண்டு.

பக்தி இயக்கத்தின் ஆரம்ப காலத்தில் எழுந்த சில பாடல்கள் சமண பௌத்தரை எதிர்க்கும் பான்மையில் அமைந்தவைதான்.

ஆனால் பக்திப் பாடல்கள் என்னும் பெருவெள்ளத்தினைப் பிரச்சாரமென்று நாஸ்திகர்களே ஒதுக்க முடியும்.

சாமிநாதையர், ஆறுமுக நாவலர் போன்றோர் இறக்கும் பொழுதும் திருவாசகத்தை மறவாத சிந்தையராக இருந்தனர்.

உலக இலக்கியத்தில் திருவாசகம் போன்ற பாடல்களைக் காணமுடியாது என்று மேற்குநாட்டு அறிஞர் போப் கூறியதற்கு பின்வரும் திருவாசகப் பாடலையே சான்றாகக் கொள்ளலாம்.

''மெய்தானரும்பி
விதிர் விதிர்த்துன்
விரையார் கழற்கென்
கைதான்றலை வைத்துக்
கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் றவிர்ந்துன்னைப்
போற்றி
சயசய போற்றி யென்னுங்
கைதா னெகிழவிடே
னுடையா
யென்னைக் கண்டு
கொள்ளே''

பல்லவர் காலத்தின் பக்திக் கோலத்தின் வெளிப்பாட்டின் ஒரு கூறாகவே இத்திருவாசகப் பாடல் அமைந்துள்ளது. தமிழும் சைவமும் தமிழர் வாழ்வும் இணைந்து காட்சியளித்ததைப் பல்லவர் காலத்தின் பக்திக்கோலத்திலே கண்டு தெளியலாம்.

இராமநாதபுரம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

**ஏலவிற்பனை**

23-8-66 10 மணிக்கு சங்கத்தில் உள்ள காரியாலயத்தில் ஏல விற்பனை சங்க தலைவர் காரியதரிசியால் நடாத்தப்படும்.

பொருட்கள் விபரம்

மண் எண்ணெய் பரல்கள் 10.

மருந்து தெளிக்கும் கருவிகள் 4.

பெற்ரோல் மாவி 1.

தரம் குறைந்த சாக்குகள் 2000.

பலரக பொருட்கள்.

இங்ஙனம்
அ. கதிரவேலு
கௌரவ காரியதரிசி
913

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இ. போ. ச. பஸ்ஸில்

# ஒரு நெடுவழிப் பயணம்

## — "காங்கேயன்" —

கல்லோயா கார் நண்பர் எங்களெல்லோரையும் ஒரு குளனிக் கிராமத்துப் பாடசாலை ஆசிரியர் வீட்டுக்கு அழைத்துச் சென்று மதிய போசன விருந்தளித்தார். களகளவென்று தண்ணீர் பாயும் வாய்க்கால் ஓரமாக அமைந்திருந்த அந்த சுச்சுதமான வீட்டை பாடசாலை ஆசிரியர்களுக்கென்று கல், போர்ட் கட்டிக் கொடுத்திருக்கிறது. இங்கேயே வாழ் நாள் முழுக்கவும் இருந்து குளனிப் பிள்ளைகளுக்கு படிப்புச் சொல்லிக் கொடுத்துக்கொண்டிருக்கலாம் என்று தோன்றுகிறது. அவ்வளவு சூழலில் பள்ளிக்கூடமும் ஆசிரியர்களின் வசிப்பிடமும் அமைந்திருக்கின்றன. ஆனால் நாங்கள் போன அன்று அங்கு யாரையும் காணவில்லை. வாராந்த விடுமுறைக்கு ஊருக்குப் போய்விட்டார்களாம். குளனியில் விளைந்த அரிசியும் காய்கறியும் பழமும் தயிரும் முட்டையுமாக கல்லோயா நண்பரின் விருந்து பிரமாதம். 'மீனும் சோறும்' மட்டக்களப்பு நாட்டில் தனிச் சுவை பேசுகிறது ஓய்!

8 மணிக்கு மட்டக்களப்பு நகருக்குத் திடும்பிவிட்ட எனக்கும், என் துணைவருக்கும் இரவு 7-30 மணி மட்டில் எப்படி நேரத்தைப் போக்குவதென்ற ஒரு பிரச்சினை தலைதூக்கியது. அது குறித்து ஆலோசித்துக் கொண்டிருந்தபோது, என் துணைவர் திடீரென்று போல் மாயமாகமறைந்துபோனூர். ஐயையோ, மந்திர மாயத்துக்குப் பெயர் பெற்ற பொல்லாத ஊர் ஆச்சே; இந்த மனிதர் எங்கெங்கு போய் எப்படி மாட்டிக் கொள்ளப்போகிருரோ? அவரது பொடி டப்பாக்கூட என் கையிலிருக்கிறதே-என்று எண்ணிக் கவலையடைந்தவனுக பக்கத்தே கண்ணில் பட்ட ஒரு புத்தகக் கடைக்குள் நுழைந்தேன். அங்கு அடுக்கிவைத்திருந்த புத்தகங்கள் முழுவதையும் ஒவ்வொன்ருகத் தட்டிப் பார்த்து முடித்துவிட்டு நேரத்தைப் பார்த்தேன். மணி ஆறு. 'ஆடக சவுந்தரி' என்ற ஒரு புத்தகத்தை மட்டும் விலைக்கு வாங்கிக்கொண்டு மெல்ல அங்கிருந்து நழுவினேன்.

காணமற்போன நண்பரை இன்னும் காணவில்லை. 7 மணி மட்டில் பாய்ச்சுருளும் கையுமாக ஆள் பஸ் நிலையத்தில் தோற்றப்பட்டார். "தயிர் முட்டி கிடைக்கவில்லையா" என்று கேட்டேன். அவரோ நிரம்ப அமைதியாக "தயிர் வாங்கிக் கொண்டுபோனுல் பஸ் யாழ்ப்பாணம்போய்ச்சேர்வதற்குள்ளாக அது மோர்ஆகிவிடும்" என்ருர். என் குரல் தொனித்த எரிச்சலைச் சற்றேனும் பொருட்படுத்தாமலே தொடர்ந்து "தயிர் முட்டி வேணுமானுல் ரயிலில் பிரயாணம் செய்ய வேண்டும். பக்குவமாக இலைகளால் சுற்றிக்கட்டிக் காவு சுமந்து, ஸ்டேஷனில் ரயில் பெட்டிக்குள்ளேயே கொணர்ந்து கொடுப்பார்கள். ஒன்றேகால் ரூபாய் தான்" என்ருர்.

"பாய்வாங்கி இத்தனை நீளமாக அதைச் சுருட்டிக் கொண்டு வருகிறீரே. பஸ்ஸில் உம்மை நுழையவிட மாட்டார்கள். பஸ் நிலையத்தில்பாயை விரித்துப்போட்டுப் படுக்கவேண்டியது தான்" என்று பயமுறுத்தினேன். "போனுல்போகிறது இரண்டு பாயும்கூடி ஆக எட்டு ரூபாதானே. பாடுமன் நானெல்லோ இதைக் கொண்டுவந்து சேர்க்கிறது. உமக்கு வெட்கமாயிருந்தால் பஸ் பிரயாணத்தின்போது என்னேடு பேசாமல் விடுமன்" என்று சொல்லிவிட்டார்.

"என்னவோ, உமது இஷ்டம். பஸ்ஸுக்குள்ளேபாயை விரித்துப்போட்டுப்படுத்துக் கொண்டு பிரயாணம் செய்தாலுங்கூட எனக்கு கவலையில்லை" என்றேன் நானும் எகத்தாளமாக. உடனேயே, நமக்குள் மீண்டும் மனவேறுபாடு நுழைந்துவிடக் கூடாதே என்று எச்சரிக்கையடைந்தவனுக "இத்தனை நேரமாக எங்கே தான் தொலைந்து போயிருந்தீர்" என்று சமாதானமாகப்பேசிய போது நண்பர் தமது நாலுமணிநேர சாதனையை விளக்கலானுர்.

"இங்கிருந்து ஒரு கூப்பிடுதொலைவில் ஒரு கொட்டகையில்நாற்காலிகள்வாடகைக்குக் கொடுக்கிருர்கள். மணித்தியாலத்துக்கு 75 சதம்தான்." "அப்போ நீர் போய் அதில் ஒரு நாற்காலியில் உட்கார்ந்துவிட்டீராக்கும். அதன்மேல்-?"

"அதன்மேல் - என்ன? அங்குதான் வானமும் பூமியும் இந்தப் பிரபஞ்சமே அடக்கமாகியிருக்கிறதே. எத்தனைபேர், எவ்வளவு காட்சிகள்-"

எனக்குத் திகிலாகிவிட்டது. மட்டக்களப்பு மந்திரவாதியின் குகைக்குள்ளே தான் ஆள்போய்ச் சிக்கிக் கொண்டு பிறகு எப்படியோ தப்பிப்பிழைச்சு வந்து இப்படிக் கதை அளக்கிருரே! மாமாங்கப் பிள்ளையாரே!

நண்பர் தன் கதையைத் தொடர்ந்தார்!

"அந்த நாற்காலிகளில் ஒன்றில் போய் ஜம்மென்று உட்கார்ந்துவிட்டேன். சற்று வேளையில் என்னை நீண்ட நேரம் காக்கவைக்காமல் மகாநாயகதேரோ, மாவிட்டபுரம் கந்தசுவாமிகோவில் குருக்கள், தமிழ்நாட்டுக்கருணாநிதி எல்லோரும் என் முன்தோன்றி எனக்கும் பேட்டியளித்தார்கள். மட்டுநகர் ஆடவரும் மகளிரும் நூற்றுக்கணக்கானேர் என்னைச் சூழ்ந்துகொண்டார்கள். யாழ்ப்பாணத்து நாதஸ்வர கானம் மங்கள இசை பொழிந்தது. அதன் பின்னுல் மட்டக்களப்பு பெண்களின் விம்மலும் அழுகையும். பாவம், பெண்களாகப் பிறந்துவிட்டாலே இந்தஉலகில் ஆடவர்கள் மத்தியில் வாழ்வது கொடிது கொடிது காண—"

"ஆனுல்-உமது கண்களும் கூடக் கலக்கிஞற்போலிருக்கிறதே. எங்கை சங்கதி யாரிடம் கதை அளக்கிறீர்? கருணாநிதி தோன்றி என்ன சொன்னுர்?" நண்பரின் காதைப் பிடித்து முறுக்கினேன்.

"கருணாநிதி தோன்றி ஒரு மேசை மீது சாய்ந்து

(10ம் பக்கம் பார்க்க)




**சுடர் விளக்கு** ஆசிரியர்: செல்வி பா. பாலேஸ்வரி. வெளியீடு: திருகோணமலை தமிழ் எழுத்தாளர் சங்கம். விலை சதம்: 2-50

எழுத்தாளர் வரிசையிலே ஒருவராக இடம் பெற்றிருக்கும் செல்வி பா. பாலேஸ்வரி பெண் சமுதாயத்திற்குப் பெருமையளிப்பவராக விளங்குகிருர். இவர்படைப்புக்களாகிய சிறுகதைகள், நாவல்கள் ஈழத்தமிழ்ப் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன.

வீரகேசரிஇதழில் தொடர்ந்து வெளியாகிய இவரது முதல் நாவலாகிய 'சுடர் விளக்கு' புத்தகஉருப் பெற்று வெளிவந்துள்ளது. உயிரோட்டமுள்ள நாவலிற்கு இயற்கை வர்ணனை கவர்ச்சியூட்டுகிறது. மனித உணர்ச்சிகளை தமக்கேயுரிய நடையில் அழகாக அப்படியே வர்ணித்துச் 'சுடர் விளக்கு' வாசகர் உள்ளங்களைத் தொடும்படி செய்திருக்கிருர். இதோ! சில வரிகள்:

'சங்கர் தற்போது அவள் வாழ்க்கையில் குறுக்கிட்டுள்ளார்... அவளுடைய மனம் அவளையறியாமலே சங்கரை விரும்புகிறது. ஆனுல் அறிவு மறு கோணத்தில் எழுந்து அந்தஎண்ணத்தைவேரோடு வெட்டிப் புதைக்கின்றது. இலட்சியம் என்ற ஒன்று அவளுக்கும் சங்கருக்கும் இடையே பெரிய அரக்கனைப் போல் வானளாவ ஓங்கிநிற்கின்றது. தனது இலட்சியம் தாயின் கடைசி ஆசை. அந்த உத்தம ஆத்மாவின் அபிலாசை நிறைவேறச் சங்கரின் உறவு சிறிதாவது தடையாக இருக்கக் கூடாது என்பது அவள் எண்ணம்.'' இலட்சியமா? காதலா? இரண்டும் ஒன்றிற்கு ஒன்று தடையாக நின்று ஒருபெண் உள்ளத்தைப்பரிதாபமாக்கு வதை ஆசிரியர் அழகாக விளக்குகிருர்.

கருத்தொருமித்துஇருவர் மனமும் இயைந்தபின் தந்தைக்குமைந்தன் தன் உள்ளத்தைத் திறந்து காட்ட இதயம் இலார்போன்று சீறிவிழுகிருர் தந்தை:

[மதிப்புரை வேண்டுவோர் ஒவ்வொரு புத்தகத்திலும் இரு பிரதிகள் அனுப்பவேண்டும்.]

'டேய் உன்னைப் பெற்றெடுத்த அப்பனிடமே இந்த வெட்கங்கெட்ட விஷயத்தைக் கூற வெட்கமாயில்லை. உனக்கு எத்தனை நெஞ்சழுத்தம் வேண்டும் இதை என்னிடம் கூற! உன்னைப் பெற்று வளர்த்துப் படிக்கவைத்தேன் பார்! எல்லாம் அதனுல் வந்த வினைதான்! உன் இஷ்டப்படி நான் இருக்கும் வரை நீ செய்யவே முடியாது."

"அப்பாவாம் அப்பா! அப்பதத்தை உபயோகிக்கும் அருகதையிருந்தால் கண்டிப்பாக நீ வஸந்தியை மணந்துகொண்டே யாக வேண்டும்."

'உன் விருப்பப்படி நடந்தால் எனக்கும் உனக்கும் முள்ள உறவு இன்றோடு முறியவேண்டியதுதான்.


(10ம் பக்கம் பார்க்க)

## சாஸ்திரிய முறைப்:...


(7-ம் பக்கத் தொடர்ச்சி)

(2) பல்கலைக்கழகக் கட்டத்தில் விசேஷ தகுதி பெற விரும்புவோர், மொழியியலில் மட்டுமல்லாது சாஸ்திரிய முறைப்படிப்பிலும் நல்ல தேர்ச்சிபெற்றவர்களாயிருத்தல்வேண்டும்.


# 7ரு. நிறையுள்ள கண்ணன கண்ணன்



## அவன் ஒஸ்டர்மில்க் அருந்தி ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும் வளர்வான்




ஒஸ்டர்மில்க் சுத்தமான, தூய்மை மாருத பூரண பால் உணவு, பச்சிளங் குழந்தையின் மென்மையான ஜீரணத்திற்கு பாதுகாப்பானது. அயச்சத்தும், விட்டமின் Dயும் சேர்க்கப்பட்டிருக்கும் ஒஸ்டர்மில்க் குழந்தைகளை திடகாத்திரமாகவும், ஆரோக்கியமாகவும் வளரச்செய்கிறது.

துவக்கத்திலிருந்தே ஒஸ்டர்மில்க் குழந்தைகள் பெலனுன சுக வளர்ச்சி பெறுகிருர்கள்.

# ஒஸ்டர்மில்க்

கிளக்ஸோ-அலன்பரீஸ் சிலோன் லிமிட்டட்., தபாற் பெட்டி 23, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றும் பரிசு பெற்ற விடிவெள்ளி நினைவுக் கட்டுரைகள்

# இலட்சிய வாழ்வு வாழ்வோம்

--ஸ்ரீமீனாட்சி பொன்னம்பலம் -

—1—

ஏது வாழ்வு?- இது நம்மில் பலரிடமும் எழும் வினைகளில் ஒன்றாகும். இவ்விடையை யாரிடம் சென்று கேட்பது? ஏன் தயக்கம்- வாழ்பவர்களிடம் சென்று கேட்டால் போகிறது; தகுந்த விடை கிடைத்து விடும்தானே என்று எண்ணலாம். சென்று கேட்டுப் பார்த்தால் தான் தெரியும். வாழ்வோரிலேயே பெரும் பாலோர் இவ்வினாவிற்கு விடையிறுக்க முடியாமல் திண்டாடுகிறார்கள்! சிலர் திருதிருவென்று விழிப்பதையும், இன்னும் சிலர் தம் தலையை இடம் வலமாக ஆட்டுவதையும், இன்னும் சிலர் தாம் வாழ்ந்து கொண்டு எது வாழ்வென்று கூற முடியாத வெட்கத்தினால் ஏதாவது சவால் விட்டுவிட்டு தழுவுவதையும் நாம் நேரிலேயே பார்க்கலாம். ஒரு சிலர் மாத்திரம் தம் அறிவுக்கெட்டிய படி, நன்றாக உண்டு களித்து பிறரை ஏமாற்றி, தீயவழிகளால் பணத்தைச் சம்பாதித்து, விவாகம் செய்து பிள்ளைகளைப் பெறுதலையோ அல்லது இன்னும் வேறதையோ வாழ்வென்று கூறுகிறார்கள். ஆனால் வாழ்வு என்பது இதுவல்ல.

வாழ்வென்பது அரும் தமிழ்க் குறள்களுக்கேற்ப சிறந்த பண்புகளாகிய வாய்மை, அன்பு, நேர்மை, நல்லொழுக்கம் போன்றவற்றைக் கடைப்பிடித்து வாழ்தலே. உண்மை உயர்வு தரும். அன்பின் சிறப்பு சொற்களால் விபரிக்கமுடியாதது அன்பு இல்லாத உயிர் வாழ்க்கையினால் பயனேதும் இல்லை.

நாம் ஒருவரையும் புறங்கூறாது, பழிக்காது, குற்றங்குறையிருந்தால் தக்கவாறு திருத்தி, கடுஞ்சொற்களைப் பேசாது, இன்சொற்களையே பேசவேண்டும். 'கடுஞ்சொற்களைப் பேசுதல் பழமிருக்கக் காயை உண்டல் போலாகும்.' நாம் பொறுமையின் அறத்தைக் கைக்கொண்டு பண்பட்ட வாழ்க்கை நடத்த வேண்டும். நாம் நம் மாவியன்றதைக் கொடுத்து வாழ வேண்டும்.

இவ்வாழிசூழ் உலகில் வாழும் ஒவ்வொருவரும் வானம் போட்டதே, பூமி தாங்கியதே என்றிராமல் உயர்ந்த இலட்சியங்களையும் பரந்த எண்ணத்தையும் கொண்டு வெற்றிகரமான வாழ்க்கை நடத்த வேண்டும். இலட்சியம் என்பது ஒரு கடைச்சரக்கல்ல. அது தன்மான உள்ளத்தை-சீர்திருத்தப் போர்க்களத்தை- அறிவுப்புரட்சியை-அன்பு எழுச்சியை-புத்துணர்ச்சி கொண்ட சமுதாயத்தைத் தோற்றுவிக்கும் ஒன்றாகும்.

காந்திமகான் வாழ்ந்தார். அதுவே வாழ்க்கை. கத்தியின்றி ரத்தமின்றிப் போர் தொடுத்து நாட்டுக்குச் சுதந்திரம் பெறுவது என்ற இலட்சியத்தைக் கொண்டு வாழ்ந்து வெற்றி கண்டார்.

(10-ம் பக்கம் பார்க்க)

—2—

# வாழ்வு பிரகாசிக்க....

— சி சுதந்திரராஜா —

ஒரேயொரு முறைமட்டும் மலரும் மலரைப்போன்றது மனிதனின் வாழ்வு. மலரும் மலர்களனைத்துமே ஒரே வடிவத்தில் அமைவதில்லை; இது இயற்கையன்னையின் படைப்பு. இதனைப் போலவே மனிதர்களின் வாழ்வும் வெவ்வேறு விதமாக அமைகின்றது. எதிர்கால வாழ்வு என்னுஞ் சிலையை செவ்வனே செதுக்கவேண்டிய சிற்பிகள் இன்றைய இளஞ்சிறுர்கள் தாம். நாம் செதுக்குஞ் சிலைகள்




வெவ்வேறு ரூபத்தில் அமைந்தாலும் அது உயிரற்ற பொற்சிலையாக அமைத வேண்டுமே தவிர வெறுங் கல்லாக மட்டும் சமைந்து விடக் கூடாது.

அடிமைத் தளையை அகற்றிப அஞ்சா நெஞ்சம் கொண்ட ஆபிரகாம்லிங்கன் ''தமது வாழ்வு நல்வாழ்வாகவேண்டுமெனில் மெழுகு வர்த்தியைப்போல தன்னையழித்து பிறருக்குப் பிரகாசம் கொடுக்கவேண்டும்'' என நல்வாழ்வுக்கு வரைவிலக்கணம் வகுக்கின்றார். உலகம் போற்றும் உத்தமர்களான இயேசுநாதர், முகம்மது நபி, புத்தபிரான், மகாத்மா காந்தி போன்றவர்களது ஊனுடல் அழிந்தும், புகழுடல் அழியாதிருக்கக் காரணம், அப்பெருந்தகைகள் தமக்கென வாழாது பிறருக்கென வாழ்ந்தார்கள். பிறரது நலத்தில் அக்கறை பூண்டு பிறருக்கெனவே நம்மை அர்ப்பணித்தால் தான் நாமும் மனிதர்குல மாணிக்கங்களாக மருவ முடியும்.

கதிரையிலிருந்து உழைக்கும் உழைப்பையே கண்ணியமானதெனக் கருதக் கூடாது; நம் நாடு பின்தங்கி நிற்கும் விவசாயத்துறைக்கு நம் வாழ்வை அர்ப்பணித்தால், எம்மை ஈன்ற ஈழமாதாவுக்குச் செய்யும் சிறிய கடமையைச் செய்தது போலாகும். இதுதான் தேசாபிமானமுள்ள ஒவ்வொரு கற்ற வாலிபர்களும் செய்யத்தக்க செயலாகும் தவிர, ஆடம்பரமின்றி அற்புதவாழ்வு வாழ்ந்த டால்ஸ்டாய் பாரில் சிறந்தான், உள்ளங்களில் நிறைந்தான், உலகப்புகழ் அடைந்தான்! ''சிறுகக் கட்டிப் பெருக வாழ்'' என்ற பொன்மொழியை நினைவிலிருத்தி சிக்கன வாழ்வைப் பின்பற்றினால் நம் வாழ்வு வளம் பெறும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியன்றோ.

உள்ளத்திலே நஞ்சும் உதட்டிலே இனிப்புங்காட்டி பஞ்சபாண்டவர்களைச் சூதாட வைத்து வாழ்த் துரியோதனனுதியோர் ஈற்றில் நண்பரையிழந்து, உற்றார் பெற்றாரையிழந்து, தாரமிழந்து அனைவரும் மாண்டொழியவில்லையா? இந்தியாவின்மீது இருபத்தேழு தடவைகள் படையெடுத்துச் சென்று பொன்னையும், முத்து பவளங்களையும் கொடூரமாகக் கொள்ளையடித்த கஜினி முகமது அத்தனை பொருட்களையும் அனுபவிக்க முடியாமல் மாரடைப்பால் மாண்டான்.

''உள்ளத்தில் உண்மை ஒளி உண்டானால் வாக்கிலே ஒளி உண்டாகும்'' என்கிறார் பாடிப்புகழடைந்த கவி பாரதியார். நம் உள்ளத்தில் வஞ்சகம், பழிக்குப் பழிவாங்கும் மனோபாவம், தீய எண்ணங்கள் குடிகொள்ளக்கூடாது அத்தகைய அதிபாரத்தில் எழும் வாழ்வு ஆழிக்கடலில் கட்டிய மண்கோட்டைபோன்று அழிந்தொழிந்துவிடும் என்பதற்கு இராவணனுதியோரே தக்க சான்று.

உள்ள உறுதியால் இறைவனை நேரிலே கண்டார் தேன் சொட்டும் திருவாசகத்தை அருளிய மணிவாசகப் பெருந்தகை. மதப்பற்றில்லாவிடில் நமது வாழ்வு வேரில்லா மரம்போல் மடிந்துவிடும். அவனன்றி ஓரணுவும் அசையமாட்டா என்பதனை எம் சிந்தையிலிருத்தி, பிற உயிர்களிடத்தே அன்பு பூண்டு பிறவிப்பயனை நன்நெறியில் கழித்துக்கொண்டால்வாழ்வுசிறக்கும் என்பது வெள்ளிடைமலை.

விஞ்ஞான மேதை நியூற்றனைப்போல, சமாதானத்தின் தூதுவன் கென்னடியைப்போல, பொன்மொழிப்பாவலன் பெர்னுட் சாவைப்போல, வில்சன்கர்வர்த்தி கம்பனைப்போல நாமும் வளரவேண்டும். ''துணிவைத் துணைகொண்டு விடாமுயற்சியென்னும் சக்தியை உள்ளிருத்தி வாழவேண்டும்'' என்ற எழுத்தாளன் அலெக்சாந்தர் டியூமாசின் கூற்றுக்கமைய வாழ்வோம் என நாம் கங்கணம் கட்டிக்கொண்டால், நம் வாழ்வு சிறக்கும், உயரும், பிரகாசிக்கும்!

---




# இல்லத்தரசி

— செல்வி கோ. சிவஞானவதி —

இல்லற வாழ்வில் அருங் குணவதியான பெண் ஆடவனுக்கு அரிய துணையாக விளங்குகின்றாள் தன் புனிதச் செயல்களால், தியாக உணர்ச்சியினால் அவனைப் பெருமைப் படுத்துகிறாள். வாழ்க்கைச் செடியானது கிளைத்து மலர்ந்து கனிந்து விரிவுபெற்று மங்கலம் பெருக வைக்கின்றாள். இதனையே,

''வாழ்க்கைத் துணையும்
வகையும் விரிநலமும்
ஆக்கமும்
பெண்சக்தியாம்''

என்று அழகாக ஈரடிகளில் புலப்படுத்துகின்றார் சுத்தானந்த பாரதியார்.

பால் வண்ண மல்லிகையும் முல்லையும் முதல் நாளைய வாடிய மலர்களை உதிர்த்து விட்டுப் புது முகைகளை அரும்பவைக்கின்றன அது போலவே உத்தமியான பெண்ணானவள் தீய எண்ணங்களை-அற்ப ஆசைகளை உதிர்த்துவிட்டு நற்சிந்தனைகளை உள்ளத்தளவில் அரும்பவிட்டுத் தன் வாழ்விலும் நிறைவு பெறுகின்றாள்.

குலநலம் பேணும் பெண் நாணமே அழகாகவும், கற்பு நெறியே தன் உயிராகவும் கணவனின் சொல் தவறாமையே உயர்வெனவும் மதிக்கின்றாள். கற்புள்ள மனைவியானவள் பிறர் கண்டு மயங்க மேனிமினுக்கி அலங்காரம் செய்யமாட்டாள்.

இதனையே,

''பகட்டவணி கொள்ளாள்
பதிக்கனியாவாள்
அகத்திற்கு வாய்த்த
திருவாம்''

என்கிறார் சுத்தானந்த பாரதியார். ஆனால் இன்றைய சமுதாயத்தில் இதற்கெதிரான பண்பற்ற பெண்கள் நற்குடிமாதரிடையே களைப் பூண்டுகள் போல் காணப்படுகின்றனர். இது மறுக்கமுடியாத உண்மை.

''பூக்களின் வாசனையானது காற்றை எதிர்த்துச் செல்வதில்லை. சந்தனக் கட்டை தகரப்பூ மல்லிகை முதலியவற்றின் வாசனைகளும் காற்றின் எதிர்த்திசையில் செல்வதில்லை. ஆனால் நல்லவர்களின் புகழ் மணமோ சூறைக்காற்றையும் எதிர்த்துச் செல்கிறது. ''நல்லமனிதன் எந்தத் திசையிலும் பரவி நிற்கிறான்'' என்றார் பகவான் புத்தர். அதுபோலவே நற்குணம் அமையப்பெற்ற பெண்ணின் சிறப்புகளும் எங்கும் பரவிப் புகழ்பெறுகின்றன என்பதை மங்கையர் உணரவேண்டும் இன்னும் மனையை மாட்சியுறச் செய்யும் மதிமிக்க மனைவியானவள் தன் புனிதச் செயல்களால், வாழ்வின் மங்கல விளக்கைப் பலகாத தூரம் ஒளிவீசச் செய்கின்றாள். அதேசமயம் மதியிருந்தும் முறையான வாழ்வு வாழத்தெரியாது இருட்குகையில் தத்தளிக்கும் ஏனைய பெண்களுக்கு ஒளிகாட்டும் கலங்கரைவிளக்கமுமாகின்றாள். எனவே இத்தகைய பெண் வாழ்வின் உறுதுணையுமல்லாமல் இல்வாழ்வைத் தன் இனிய செயல்களால் இதழ் இதழாக மலரவைக்கும் இல்லத்தரசி என்பதையும் மறந்துவிடக் கூடாது.

பெண்ணே!

''பொருட்படுத்தக்கூடாத இல்லறை விஷயங்கள் அடிக்கடி நம் அமைதியைக் குலைப்பதற்கு இடம்கொடுத்துவிடுகின்றோம். இந்த உலகத்தில் ... காலத்துக்கே. கொஞ்ச நாளில் நாமும் ... களும் மறந்துவிடப் போகின்ற மனத்தாங்கல்களைப் பற்றி நினைத்து நினைத்து, விலைமதிப்பற்ற நேரத்தை இழந்துவிடுகிறோம். வேண்டாம்! உருப்படியான காரியங்கள், உணர்ச்சிகள், உயர்ந்த சிந்தனைகள், உண்மையான அன்பு, நிலைத்திருக்கக்கூடிய முயற்சிகள் இவற்றுக்காக நம் வாழ்க்கையை அர்ப்பணிப்போம். ஏனெனில் வாழ்க்கை மிக மிகச் சுருக்கமானது சின்னத்தனத்திற்கு நேரமில்லை'' என்றார் ஆண்ட்ரே மாரிவா!'

எனவே பெண்ணாகிய நீயும் உன் வாழ்க்கையை இவ்வழியில் செலுத்த முயன்றாயானால் நீயும் ஒரு பொறுப்புமிக்க இல்லத்தரசியாக ஏன் வரமுடியாது!

### மகளிர்க்கும் துறவு அவசியம்

தற்காலத்தில் தேவைகளை முன்னிட்டு ஆராய்ந்தால் பெண்மக்களில் சிலரைத் துறவு இலட்சியங்களில் பற்றுண்டாகுமாறு பயிற்சிசெய்தல் அவசியம் எனக் காண்கின்றது. அவர்கள் அனாதி காலமாகத் தங்களுடைய இரத்தத்தில் ஊறிப்போயிருக்கும் பதிவிரதா தர்ம பலத்தினால் ஊக்கமடைந்து வாழுநாள் முழுவதும் கன்னிகளாகவே இருந்துகொண்டு செய்வதாகவிரதங் கொள்ள வேண்டும். பெண் பள்ளிக்கூடங்களில் கல்வி போதிக்கும் கடமை, படிப்புள்ள இளம்பெண்களுக்கும்பிரமச்சாரிகளுக்கும் எவ்வாற்றானும் உரியதாகும். பெண் பள்ளிக்கூடங்களில் ஆண்களின் தொடர்பை விலக்குதல் நலம்.

சமயம், கலைகள், பௌதீக சாத்திரம், வீட்டுவேலை, சமையல், தையல், சுகாதாரம் இவற்றில் முக்கியமான அம்சங்கற்பிக்கப்பட வேண்டும்.

—சுவாமி விவேகானந்தர்

# ஏற்று நடத்தல் என்றும் உவகையே

பண்புள்ளவர்களையே பழக்கத்துக்குரியவர்களாகக் கொள்ளவேண்டும். தாறுமாறான நடத்தையும், ஊர் வம்பைக் கொட்டியளக்கும் வழக்கமும் உள்ளவர்களை அறவே விலக்க வேண்டும்.

ஃ

சினிமா மோகம் வெறியாக வளர்ந்து எத்தனையோ பேருடைய இல்லற அமைதியைக் குலைத்திருக்கிறது. பொழுதுபோக்கு என்ற அளவில் ஓரளவு அதற்கு மதிப்புத் தரலமேயன்றி ஒரேயடியாக அதிலே மயங்கி விடக்கூடாது.

ஃ

நம்பிக்கை எப்போதும் தவறான வழிகாட்டி. ஆனால் மிகவும் நல்ல வழித்துணை.

ஃ

நாம் விரும்புவது நமக்குக் கிடைப்பது இல்லை; எனவே கிடைக்கக்கூடியதை விரும்புவோமே!

ஃ

பலவீனர்களுக்குப் பாதையில் கிடக்கும் கல் தடையாக இருக்கலாம். அதுவே உள்ள உறுதிபடைத்தவர்களுக்கு முன்னேறிச் செல்ல படிக்கட்டாக அமைகிறது.

ஃ

நாக்கின் நீளம் மூன்று அங்குலம்தான் ஆயினும் அது ஆறடி உயரமுள்ள மனிதரையும் கொல்லக் கூடியது.

ஃ

அன்புகனிந்த மனைவியும், திடமான ஆரோக்கியமுமே ஒரு மனிதனுக்கு மிகச் சிறந்த மூலதனம்.

—சரோஜினிசங்கர்

### நல்லோரிலக்கணம்

நல்லோருடன் பலவாறு கவும் பழகி இணங்கி வாழும் போது நாங்கள் நல்லோரிணக்கம் உடையோம் நல்லோரிணக்கத்தை நாம் நாடிப்பெறுகின்றோம். ஒழுக்கமுடையவராய் வாழ்வதால் நல்லோருறவு எங்கட்குக் கிடைக்கிறது. நல்லோருறவால் எங்கள் வாழ்வு ஒழுக்கத்தில் உறுதியுடையதாய் பலப்படுகிறது. ''ஒழுக்கமுடையார் எல்லாமுடையார்'' என்று நற்சிந்தனை கூறுகிறது. நல்லோரிணக்கத்தால் எல்லாம் உடையராகிறோம் ''அறிவுடையாரெல்லாமுடையார்'' என்று செறிவுபெறச் சொல்கிறது தமிழ்மறை.

— சிவதொண்டன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## இ. போ. ச....

(8ம் பக்கத் தொடர்ச்சி)

தின்று கொண்டே கதை சொன்னர். பழைய நாளில் தமது பள்ளிக்கூடப்பாடபுத்தகத்தில்—''

"சரிதான், கருணாநிதியும் நீரும் ஒரே பாட புத்தகம் படித்தவர்களாயிற்றே. அதனுல் கதைகதையாகக் கனவு காண்கிறீர்கள். எங்கேயோ போய் படுத்துறங்கிவிட்டு வந்து என்ன காணும் உளறுகிறீர். பஸ் வருகிறது முன்னே நடவும்'' என்று நண்பரைப் பின்னல் பிடித்துத் தள்ளிக் கொண்டே யாழ்ப்பாணம் பஸ்ஸில் ஏறினேன்.

மட்டக்களப்பில் யாழ்ப்பாணம் என்ற பெயரையும் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் மட்டக்களப்பு பெயர்ப் பலகையிட்ட பஸ்ஸையும் பார்க்கும்போது நம் மனத்தில் உண்டாகும் ஒருவித இனியஉணர்ச்சி அதுஎன்ன? புதிய தமிழகம் உருவாகிறதே என்பதாயிருக்குமோ?

(தொடரும்)

## நமது நூல் நிலையம்

(8ம் பக்கத் தொடர்ச்சி)

என் சொத்தில் உனக்கு ஒரு சல்லிக்காசு கூடக் கிடையாது.'

'உனக்கு மானம் என்ற ஒன்று இருந்தால் இப்போதே இந்த இடத்தைவிட்டுப் போய்விடு. ம்! இன்னும் எதற்காக நிக்கிறுய்?'

'பார்வதி உள்ளே போ, உனக்கு இப்படியான ஒரு கறுதலைமகன் பிறக்கவில்லை என்று நினைத்துக்கொள்.'

பிள்ளைகளின் எண்ணத்திற்கு, விருப்பத்திற்கு மதிப்பளித்துநன்றுயின்வரவேற்க வேண்டியது பெற்ருேரின் முக்கிய பொறுப்பாகும். பெற்ருேர் மைந்தரின் உளத்தைப் புரியாமல், பொறுப்பை உணராமல் வாதிட்டுப்பின் வீட்டை விட்டு அவர்கள் பிரிந்து சென்றபின் வாழ்நாளெல்லாம் வேதனைப்படுவோர் பலரை மையமாக வைத்து நாவலை ஆசிரியர் பின்னியிருக்கிருர்.

நாவல் விறுவிறுப்பாகச் செல்வதுடன் எதிர்பாராத முடிவினைக் கொண்டதாகவும் மங்களமாகவும் முடிவடைகிறது. மொத்தத்தில் செல்வி பா. பாலேஸ்வரியின் 'சுடர் விளக்கு' வெற்றிப் படைப்பு என்றே சொல்லலாம்

— பூரணி

ஃ ஃ ஃ

சிரித்திரன் நகைச்சுவைச் சித்திரத் திங்கள் ஏடாகிய சிரித்திரனின் பதினேராவது இதழ் வெளிவந்துள்ளது.

வழமை போல் நகைச்சுவைச் சித்திரங்களும் கதைகளும், கட்டுரைகளும் தொடர் அம்சங்களும் இதழை நிறைத்துள்ளன.

ஆபிரகாம் லிங்கன் வாழ்வில் நடைபெற்ற சுவையான சம்பவங்களைக் கூறும் சிறு கட்டுரையும் நகைச்சுவை விருந்தையே அளிக்கின்றது.

சிரிப்பினூடே சிந்தனையைக் கிளறிவிடும் இதழ் 'சிரித்திரன்'.

— நவசோதி

## இலட்சிய வாழ்வு

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

நாம் வாழ்க்கையென்னும் படகை நேராகவும், சீராகவும் ஓட்டிச்சென்று இலக்கினையடையவேண்டும்.

நாம் நம் இலக்கை நோக்கிச்செல்லும்போது எத்தனையோ இன்னல்கள், இடுக்கண்கள் வரலாம். அவற்றைக்கண்டுஅஞ்சி அயராது, உள்ளம் சோராது, எதிர்த்துப்போராடி வெற்றி பெறவேண்டும். தோல்விவந்தாலும் மனம்தளராது 'தோல்வியே வெற்றியின் படிகள்' என்பதை மனத்தில் கொண்டு முயற்சிசெய்து வெற்றிவாகைசூடவேண்டும். வாழ்க்கைப் பொய்கையில் கலகம், விசாரம் ஆகியன வீசவொட்டாது பார்த்துக் கொள்ளவேண்டும்.

எனவே நற்பண்புகளையும் உயர்ந்த இலட்சியத்தையும் கொண்டு திருக்குறளாம் திருநூலைப்பின்பற்றி இலட்சிய வாழ்க்கை வெற்றிகரமான வாழ்க்கை வாழ்ந்து பயன்பெறுவதே வாழ்க்கையாகும்.

## மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கணக்கிலடங்காதது. உண்மையில் இவ்வைபவத்தில் நாம் காணுந்திருவருட் காட்சியில் இதுவே முக்கியமானதாகும். இவ்வேளையிலேதான் இவ்வாலய ஆதீன நாதஸ்வர மேள வாத்தியக்காரர்கள் கௌரவிக்கப்படுகிருர்கள்.

அன்றிரவு ஆடி அமாவாசைத் தீர்த்தத்திற்காக-கீரிமலையில் நகுலாசல சமுத்திர தீர்த்தமாடுவதற்காகச் சுவாமி எடுத்துச் செல்லப்படுவர். தீர்த்தமாடி முடித்ததும் அங்கு பக்தர்களின் வழிபாட்டிற்கு மாலைவரையும் அமர்ந்திருப்பர். பின்னர் மிகுந்த கோலாகலத்துடன் கலை நிகழ்ச்சிகள் முற்புறம் நடைபெறப் பல்லக்கிற் கோவிலுக்கு எழுந்தருளுவார். அன்றிரவு துவஜ அவரோஹணமாகி மகோற்சவங்கள் தண்டேஸ்வர, ஆசாரிய உற்சவங்களோடு இறுதிக் கட்டத்தையடையும். இருபத்தாரும் நாள் தண்டாயுதபாணி உற்சவம். இவ்வுற்சவம் 1964-ம் ஆண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டது. புராண வரலாற்றை முழுமையாக எடுத்துகாட்டக்கூடியதாக இவ்வுற்சவம் அமைந்திருக்கிறது.

இவ்வாலயத்தின் 27-ம் நாள் உற்சவம் தெப்பத்திருவிழாவாகும். இது கடந்த ஆண்டிலேதான் ஆரம்பிக்கப்பட்டது எல்லாத்திருவிழாக்களுக்குள்ளும் சிகரம் போன்றதாக இத்திருவிழா அமைந்திருக்கிறது.

தென்னிந்தியாவிலிருந்து மாவிட்டபுரக் காங்கேய மூர்த்தி காங்கேசன்துறையில் வந்துஇறங்கிய சரித்திர உண்மையை இக்காலத்தவருக்கு உணர்த்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட இத்திருவிழா சரித்திரச் சிறப்புடன் கூடியது. மாவிட்டபுரத் திருநாட்களில் மிகவும் கூடுதலான மக்கள் பார்த்து மகிழும் திருநாளாக இது அமைந்துவிட்டது. முருகப் பெருமானும் காங்கேசன் துறை கசாத்துறை ஆனந்த விநாயகனும் அலைகடலில் பவனி வருவது விசேஷமான காட்சியாகும். கடற்கரையில் பல விசேஷ நிகழ்ச்சிகளுக்குப்பின் முற்றிலும் மலர்களைக் கொண்டு உருவாக்கப்படும் பூந்தொட்டியில் முருகன் எழுந்தருளும் காட்சி கண்கொள்ளாக் காட்சி.

இத்தெப்பத்திருவிழாவை ஆடிமஞ்சத் திருநாளாகக் கொண்டாடும் வகையிலும் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இத்திருவிழாவுக்கென முருகப்பெருமான் காங்கேசன் துறைக்குச் சென்று மாவிட்டபுரம் திரும்புகையில் வீதியோரங்களிலுள்ள வீடுகள், மண்டபங்கள், வியாபார நிலையங்கள் ஆதியன அலங்கரிக்கப்பட்டிருக்கும். வாசல்களில் நிறைகுடம் வைத்துச் சுவாமிக்குப் புஷ்பமாலைகள், பட்டுவஸ்திரங்கள் ஆதியன சாத்தி அடியார்கள் வணங்குவர்.

மகோற்சவ காலங்களில் மூன்று பிரகார வீதிகளிலும் சனத்திரள் அதிகரித்துக் கொண்டேயிருக்கும். அங்கு பல்வேறு தற்காலிக வியாபார நிலையங்கள், காரியாதிகாரி கந்தோர், பொலிஸ், சுகாதார நிலையங்கள், தண்ணீர்ப்பந்தர்கள் இப்படியிப்படியே பல தோற்றுவிக்கப்படும். சங்கீத கதாப்பிரசங்கங்கள், இன்னிசைக்கச்சேரிகள் ஆதியனவும் உற்சவ காலங்களில் விசேஷமாக அலங்கரிக்கப்பட்ட வசந்த மண்டபத்தில் நிகழும்.

இக்கோவிலின் பூசைகள் மற்றும் தொழில்கள் யாவும் கோவில் ஆதீனகர்த்தாவின் கட்டளையின் பிரகாரமே நடைபெற்று வருகின்றன. இங்கு எதுவும் அவரது அனுமதியின்றி நடைபெறமாட்டாது. தில்லைவாழ் அந்தணர்களின்சந்ததியினரே இன்றும் முப்போதும் திருமேனி தீண்டும் அந்தணர்களாக மிகுந்த பக்திசிரத்தையோடு பூசைகள் செய்து வருகின்றனர்.

இப்போது கோவிற் திருப்பணிகள் யாவும் வல்லுநர்களைக்கொண்டு நிறைவேற்றப்படுகின்றன. கருங்கல் வேலைகளைக் காரைக்குடியைச்சேர்ந்த பெரியசாமி ஸ்தபதியின் தலைமையில், தேர்ந்த சிற்பிகள் பலர் இப்போது செய்துவருகிருர்கள் மூர்த்திகள் பல அவ்வவ்விடங்களிற் பிரதிஷ்டை செய்யப்பட்டு வருகின்றன. வெகு விரைவில் ஆரம்ப காலத்திருந்த பொலிவை இக்கோவிலும் சுற்றுடலும் பெற்றுவிடும் என்பதிற் சிறிதேனும் ஐயமில்லை.

இக்கோவில் விருத்தியடைந்து வருவதுபோல் ஊரும் அபிவிருத்தியடைந்து வருகிறது. கந்தப் பெருமானின் விக்கிரகங்கள் வந்திறங்கிய துறைமுகத்தைக் கொண்ட காங்கேசன்துறையும், மாருதப்புரவல்லியின் குருவான நகுல முனிவரது நகுலேஸ்வர ஆலயமும், நகுலாசலதீர்த்தத்தைக்கொண்டுள்ள கீரிமலையும் இன்று பலவிதத்திலும் அபிவிருத்தியடைந்துவருவது கண்கூடு. இங்கு பல தொழிற்சாலைகள் உருவாக்கப்பெற்றிருக்கின்றன.; சங்கங்கள் பல தோன்றியிருக்கின்றன; பாடசாலைகள் பல உள்ளன நுண்கலை ஸ்தாபனம் ஒன்றுண்டு. இப்படியிப்படியே மக்களுக்குத் தேவையான பற்பல ஸ்தாபனங்கள் தோன்றியும், தோன்றுவதற்கு ஆயத்தமாகவும் இருப்பதைக் காண முடிகிறது.

பாரதநாடும் ஈழநாடும் போற்றும் பண்டிதமணி சு. நவநீத கிருட்டிணபாரதியார், முருகேசு பண்டிதர் மகாலிங்கசிவம் போன்ற அறிஞர்கள் வாழ்ந்த மாவிட்டபுரத்திலே இன்றும் அவ்வறிஞர்களது சீடர்கள் புலவர்களாகவும் கவிஞர்களாகவும் வாழ்ந்துவருகின்றனர். மகாவித்துவான் சி. கணேசையர் அவர்கள் அயற்கிராமமான வருத்தலைவிளானில் வாசஞ்செய்தபோதிலும் மாவை முருகனில் எல்லையற்ற பக்தியைக் கொண்டிருந்தார். அவர் சுப்பிரமணியர் தோத்திர விருத்தம் ஒன்றினையும் பாடியிருக்கிருர்.

வளர்ந்துவரும் மாவிட்டபுரக் கந்தசுவாமி ஆலயத்துக்கு நாமனைவரும் ஒன்றுசேர்ந்து எம்மால் முடிந்த தொண்டுகளையாற்ற வேண்டும். வேல்முருகன் புகழ்தரும் மாருதப்புரவல்லியின் மாவிட்டபுரம் மாண்புடன் விளங்க நாமெல்லோரும் இறைவனைத்துதிப்போமாக.

## உங்கள் இராசி பலன்

### எழுதுவது
### சோதிட ஆசான் செ. தெல்லியூர்

[15-8-66 — 22-8-66]

**மேட இராசி**

எதிர்ப்பு நீங்கி சந்தோஷம் அடைதல், முயற்சிகள் பலிதமாதல், உத்தியோக ரீதியில் அலைச்சல், கடும் உழைப்பு, கல்வியில் இடையூறு, பிரயாண கஷ்டம், கலைச்சிறப்பு, பெண்களுக்கு குடும்பசுகம், பணவரவு.

**இடப இராசி**

சமூகத்தொண்டு, பணச் செலவு அதிகரிப்பு, தொழில் இலாபம், கல்விச் சிறப்பு, பரீட்சை வெற்றி, தூரபிரயாணம், மேலதிகாரிகள் உதவியுடன் தொழிற் சிறப்பு, கலைஞருக்கு மேன்மை, பெண்களுக்கு குடும்பத்தில் சௌசன்யமான நிலை.

**மிதுன இராசி**

முயற்சிகளில் வெற்றி, கல்வித் துறையில் சிறப்பு, முதலீடு பலன் தரல், சமூகத்தொண்டால் அலைச்சல், வர்த்தக இலாபம், உத்தியோகத்தில்சிறப்பு, தொழில் உயர்வு, கல்விப்பலன், கலைஞருக்கு முன்னேற்றம், களத்திர புத்திரசுகம்.

**கடக இராசி**

தேகநலம், பணநிலைமையில் சிறிதுகஷ்டம், பிரயாணங்கள் ஏற்படல், நண்பர் உதவி, மறைமுக எதிர்ப்புகள், உத்தியோகத்தில்கடும் உழைப்பு, பயன் குறைதல், பரீட்சைகளில் சாதாரண நிலைமை, குடும்பத்தில் சச்சரவு, பணமுடை.

**சிங்க இராசி**

தேகாரோக்கியம், முயற்சிகளில் கடும் உழைப்பு. செலவினம் அதிகரிப்பு. பிரயாணங்கள், வாய்ப்பேச்சால் கலகம், தூரபிரயாணம், கல்வித் தடை, கலைஞருக்குச் சிறப்பு, பெண்களுக்கு குடும்பசுகம்.

**கன்னி இராசி**

பொருள் வரவு, செய்தொழில் இலாபம்காணல், அதிகாரிகள் நண்பர் உதவி, இனபந்துக்கள் கூட்டு, வர்த்தகத்தில் மந்த நிலைமை, ஊழியரால் தொல்லை, உத்தியோகத்தில் கடும் உழைப்பு, கலைஞர்களுக்கு மத்திம சுகம், குடும்பச்சிறப்பு, புத்திர சுகம்

**துலா இராசி**

குடும்பத்தில்உற்சாகநிலை, செய்தொழிற்சிறப்பு, வருவாய் அதிகரிப்பு, இடமாற்றம் அல்லது நிலைப்பிரிவு, அலைச்சலால் நன்மை, உத்தியோகத்தில் கடும் முயற்சி, கலைஞருக்கு அற்பலாபம், கல்வியாளருக்குச் சிரமம், பெண்களுக்கு குடும்பசுகம், தேகநலம்பாதிக்கப்படல்.

**விருச்சிகஇராசி**

உத்தியோகச்சிறப்பு, கடும் உழைப்பு, வர்த்தகத்தில்முன்னேற்றம், அதிட்டப் பரீட்சைகளில் கஷ்டம், பிரயாணத்தால்சுகம், சமுதாய மதிப்பு, கலைஞருக்கு முன்னேற்றம், பெண்களுக்கு குடும்பத்தில் சௌஜன்யநிலை புத்திர சுகம்.

**தனு இராசி**

பிரயாண கஷ்டம், உடல் நலம்பாதிக்கப்படல், செலவு அதிகரிப்பு, கட்டடம் கட்டல், கடன்படல், வர்த்தகத்தில் சுமுகமானநிலை, ஊழியர் தொல்லை, சமூகத்தில் மதிப்பு, குடும்பத்தில் சுகக் குறைவு

**மகர இராசி**

செய் தொழில் வெற்றி, விரயங்கள் குறைதல், ஊழியர் உதவி, நண்பரால் ஊக்கம், குடும்பத்தில் சுமுகமான நிலை நிலவுதல், களத்திர புத்திர சுகம், கலைத் தொழில் முன்னேற்றம், கல்விச் சிறப்பு.

**கும்ப இராசி**

வீண் விவகாரங்கள், பலன் சுமுகமாக அமைதல், பாடுபடற்கேற்ற பலன் கிட்டல், செய் தொழில் நன்மை, அதிகாரிகள் உதவி, கல்வித்துறை மத்திம பலன், கலைஞருக்குச் சிறப்பு, குடும்பத்தில் அன்பு நிலவுதல், புத்திர சுகம்

**மீன இராசி**

முயற்சிகள் நன்மை, பூமிப் பலிதம், பிரயாணங்கள் இடையிடை ஏற்படல், முதவீடுகளால் வருவாய் குன்றல், ஊழியர் தொல்லை, மறைமுக எதிர்ப்பு, கலைஞருக்கு கஷ்டம், கல்வித் துறை மந்த நிலை, குடும்பத்தில் மத்திம சுகம்.

## இந்தியா விழித்தெழுந்துவிட்டது

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

னங்கள் கிடைப்பதிலுள்ள கஷ்டங்களும், அளவு கடந்த தாமதமும்; சக விஞ்ஞானிகளுக்கிடையே- பெரும்பாலும் வயது சென்றவர்களுக்கிடையேயுள்ள-பொருமை- இவை சில காரணங்களாகும்.

விஞ்ஞான ஆராய்ச்சிக்குத் தேவையான விஷயங்களில் வரவு-செலவுத் திட்டத்தில் போதிய நிதி வசதி செய்யப்படுவதில்லை. இன்னும் நாம் விஞ்ஞான உள்ளம் படைத்தவர்களாக இல்லை. ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் எவ்வளவு முக்கியமான பங்கை வகிக்கின்றன என் [illegible] இந்தியாவில் இன்னும் நாம் உணரவில்லை. பழங்காலப் பாட புத்தகப் படிப்பு இருக்கிறதேயன்றி, ஆராய்ச்சிக்கு வேண்டிய அளவு வசதிகள் இல்லை.

இவ்வளவு கூறிய பிறகும், திடமான நம்பிக்கைக்கு இடமுண்டு. இந்தியா விழித்தெழுந்துவிட்டது. முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது. நாம் எதிர்பார்த்த அளவு வேகமாக இல்லாவிடினும், அது முன்னேறிக்கொண்டே செல்கிறது.

மாட்டு வண்டியிலிருந்து அணுசக்திக் காலமான இன்று வரையுள்ள ஒரு நூற்றுண்டு விருத்தியை ஒரு சந்ததிக்காலத்தினுள் செய்து முடிப்பதென்பது இலகுவான காரியமல்ல. ஆனல், இதைத்தான் இந்தியா, மற்றும் சில அபிவிருத்தி நாடுகளைப்போல, ஓர் சுதந்திர, ஜனநாயக அரசியல் அமைப்பினுள், சாதிக்க முயல்கிறது.

எமது பொருளாதாரத்தைப் பீடித்துள்ள நோய் பெரிதளவு முயற்சித்ததன் பயனல்ல, ஆனல் செய்வதைச் சரிவரச் செய்யாததன் பயனே என்றே நான் கருதுகிறேன்.

நாம் மகாத்மாகாந்தியின் பின்வரும் வார்த்தைகளை நினைவுகூரவேண்டும். ''சுய உதவியும் சுய பொறுப்புமே நாம் படிக்கவேண்டிய முதற் பாடம். இப்பாடத்தை நாம் கிரகித்துக்கொண்டால், வெளிநாடுகள்மீது நம்பியிருக்கும் அவல நிலையிலிருந்தும், இறுதியான வங்குரோத்து நிலையிலிருந்தும் எம்மைக் காப்பாற்றிக் கொள்ள முடியும்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

**காணி**

நவாலி வடக்கு அரசினர் பாடசாலைக்கு அருகாமையில் விதானை வளவு எனப்படும் வீடு கட்டும் காணி விற்பனைக்குண்டு. பரப்பு 35. முழுதாகவோ பங்குகளாகவோ பிரித்துக்கொடுக்கலாம் விபரங்கட்கு கீழ்க்காணும் விலாசத்தில் விசாரிக்கவும்: T. P. பொன்னே, 64, கச்சேரி-நல்லூர் வீதி யாழ்ப்பாணம். 830

**வீடு**

12ம் வட்டாரத்தில் நம்பர் 226, காரைதீவு வீதியில் எல்லா வசதிகளுடன் வீடு விற்பனைக்கு உண்டு. குறைந்தவிலை ரூபா 45000/- மேற்பார்வையாளர், 13, சினிவாசகம் வீதி, கொட்டடி. 847

### தேவை

**அச்சுக்கோர்ப்பவர்**

குறைந்தகால அனுபவத்துடன் நுட்பமாக அச்சுக்கோர்ப்பு வேலைசெய்ய இளைஞர் தேவை. M&B அச்சகம், 119 காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம். 848

## மடுமாதா திருநாள்

மடு, ஞாயிறு

மடுத் திருநாளையொட்டி ஏற்கனவே அறுபதினாயிரம் யாத்திரிகர்கள் சென்றுள்ளார்கள். யாத்திரிகர்கள் தொடர்ந்து மடுக்கோயிலை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறார்கள். ஒரு லட்சத்திற்கும் அதிகமான யாத்திரிகர்கள் செல்வார்களென எதிர் பார்க்கப்படுகிறது. யாத்திரிகர்களுக்கு வசதியான முறையில் போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

மடுறோட் சந்தியிலிருந்து கோயில்வரை 30 விசேஷ பஸ்கள் யாத்திரிகர்களை ஏற்றிச்செல்கின்றன யாழ்ப்பாணம் மேற்றிராணியார் இன்று மடு வந்து சேருவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

## கடுழியச்சிறை

கண்டி, ஞாயிறு

திருட்டு வழக்கொன்றில் குற்றஞ்சாட்டப்பட்ட பீ. ஜீ. பியசேன என்பவருக்கு கண்டி மாஜிஸ்திரேட் திரு. டக்ளஸ் விஜயரத்ன 2 வருடக் கடுழியச் சிறைத்தண்டனை விதித்தார்.

---

படவிமர்சனம்

## நைன் ஹவர்ஸ் டு ராமா

(ஆங்கிலம்)

மகான்

மாலை வேளை: நேரம்: 5-10. மகாத்மாகாந்திஜி, பிரார்த்தனை மண்டபத்தை நெருங்கிவிட்டார். "மகாத்மா காந்திஜி ஹரிராம்" என்றகோஷம் விண்ணைப்பிளக்கிறது. மக்களின் பக்தி வெள்ளத்துக்கிடையே காந்திஜி கூப்பிய கரங்களுடன். சிரித்த முகத்துடன் அடிமீது அடிவைத்துநகர்ந்து கொண்டிருக்கிறார்.

நேரம்: 5-13 நிமிடங்கள்.

"பாபுஜி, நீங்கள் ஐந்து நிமிடங்கள் தாமதித்துவிட்டீர்கள்" என்று கூறியவாறே காந்திஜி மீது கோட்ஸே மூன்று தடவைகள் சுடுகின்றான்.

"உன்னை ... மன்னித்து... விடுகின்றேன்" என்று கூறியவாறே "ஹரே ராம்" வார்த்தைகளுடன் நிலத்தில் சரிகின்றார் காந்திஜி. நெஞ்சமே வெடித்துவிடுகிறது.

காந்திஜியின்கடைசிக்கால சம்பவங்களை வைத்து ஓரளவு தத்தரூபமாக உருவாக்கியிருக்கும் "நைன்ஹவர்ஸ் டு ராமா" ஓர் அற்புதமான சித்திரம் காந்திஜியாக வரும் காஸ்யப்பின் (இந்தியர்) நடிப்புஉள்ளத்தையே உருக்கிவிடுகிறது. தெரிந்தகதையென்றாலும் படத்தைப் பார்க்கும்பொழுது 48-ம் ஆண்டு சம்பவங்கள் கண்முன் மீண்டும்தோன்றி விடுகின்றன.

கோட்ஸேயின் வாழ்க்கைக்குமுக்கியத்துவம் அளிக்காமல் காந்திஜியின் காட்சிகளை சிறிது அதிகரித்திருந்தால் படத்தின் புனிதத்தன்மை குறைந்திருக்காது. குறிப்பாக மாணவர்களும் மற்றவர்களும் பார்க்கக்கூடிய இப்படம் இப்பொழுது யாழ்ப்பாணம் றீகல் படமாளிகையில் திரையிடப்பட்டுள்ளது.

## பொலிசாரின் மனித வேட்டை

லண்டன், ஆக. 14

லண்டன் வூதியில் நேற்று முன்தினம் மூன்று பொலிஸ்காரர்களைச் சுட்டுக்கொலை செய்தவர்களைத் தேடுவதில் துப்பறியும் பொலிஸார் பகீரதப்பிரயத்தனம் மேற்கொண்டுள்ளனர். இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை இதுகுறித்து ராணி எலிஸபெத் கவலை தெரிவித்துள்ளார்.

---

# ஐ. நா. வில் மீண்டும் சேர இந்தோனேஷியா முடிவு

## பார்லிமெண்ட் அதிகாரமளித்தது

ஜாகர்த்தா, ஆகஸ்ட் 18

கடந்த வருட ஆரம்பத்தில் ஐ. நா. விலிருந்து விலகிக்கொண்ட இந்தோனேஷியா, மீண்டும் ஐக்கிய நாடுகள் சபையில் சேர்ந்துகொள்ளவிருக்கிறது. அநேக அடுத்த மாதத்துக்குள் இந்தோனேஷியா இந்த நடவடிக்கையை மேற்கொள்ளுமென எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்று இங்கு நடைபெற்ற இந்தோனேஷிய பார்லிமெண்டின் கூட்டத்தில் ஐ. நா. வில் மீண்டும் சேர்ந்து கொள்ளவேண்டுமென்று ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது.

அடுத்த மாதத்தில் பொதுச்சபை கூடுவதற்கு முன்னர் ஐ. நா. வில்இந்தோனேஷியா சேர்ந்துகொள்ளுமென்று பாரிலிமென் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

இந்தோனேஷியாவுக்கும் மலேசியாவுக்குமிடையே ஏற்பட்ட நெருக்கடிகளைத் தொடர்ந்து மலேசியா ஐ. நா. வில் சேர்ந்ததும் இந்தோனேஷியா ஐ. நா. விலிருந்து விலகிக்கொண்டது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

### சுகர்னோ அறிவிப்பு

இந்தோனேஷிய அதிபர் டாக்டர் சுகர்னோ நேற்று மலேசிய— இந்தோனேஷிய உறவுகள் பற்றிக் குறிப்பிடுகையில், ஸாபா, ஸரவாக் மக்கள் எதில் சேரவேண்டுமென்று விரும்புகிறார்களோ அதற்குப் பின்னரே மலேசியாவுடன் இந்தோனேஷியா ராஜீய உறவுகளை ஆரம்பிக்குமென்று தெரிவித்தார்.

## கிளி இல்லம் வெற்றி

புதுக்குடியிருப்பு, ஞாயிறு

புதுக்குடியிருப்பு சி. சி. தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டி பாடசாலை மைதானத்தில் கிராமசேவையாளர் திரு. இ. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது. போட்டிகளில் கிளி இல்லம் 136 புள்ளிகளைப் பெற்று முதலாவது இடத்தையும், புறா இல்லம் 128 புள்ளிகளையும் பெற்று இரண்டாவது இடத்தையும், மைனா இல்லம் 98 புள்ளிகளைப் பெற்று மூன்றாவது இடத்தையும் பெற்றன.

விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு புதுக்குடியிருப்புக் கிராமசேவையாளர் திரு. இ சிவப்பிரகாசம் பரிசில்களை வழங்கினார்.

---


# எதிர்பாருங்கள்!!

## யாழ். நகரமண்டபத்தில்

**15—8—66 முதல் 19—8—66 வரை**

தினசரி பி. ப. 6—30 மணிக்கும் 9—30 மணிக்கும்

— தேவ் & தேவ் அளிக்கும் —

# பாச நிலா

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்பட்ட
முதல் முழுநீள 16 மி. மீட்டர் தமிழ்ப் படம்
(பாதி கலரில் -காந்தஒலி)
(Processed in Germany — Sound Striped in Canada)

நடிகர்கள்:
செல்வராஜன் - ரஞ்சி செல்வராஜன்
மனோகரன், ஜெயந்திரா
ஐடா தேவேந்திரன்
முதலியோர்

டிக்கட்: 6-30 மணிக் காட்சிக்கு ரூபா 5, 3, 2
9-30 மணிக் காட்சிக்கு ரூபா 3, 2,


---




## கொழும்பு

### 15 - 8 - 66 திங்கள்

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

844 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-15 'மாவை முருகன் அஞ்சல், 7-30 பாட்டு, 7-45 தமிழோடிசை பாடல், 8-00 மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழா—அஞ்சல், 11-30 சிறுவர் மலர்

844 மீட்டர்&49 மீட்டர்

பகல் 12-15 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

844 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 4-00மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் தேர்த் திருவிழா அஞ்சல்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 இசைக்கச்சேரி —என். சண்முகரத்தினம் 7-45 கலை ஏடு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி 9-15 வாத்திய இசை, 9-30 தமிழ்மூலம் சிங்களம், 9-45 எங்கள் விருப்பம், 10-00 நேயர் விருப்பம்.

## வட கொழும்பில் சைவ வளர்ச்சி

கொழும்பு, திங்கள்

கொழும்பு நகரின் வடபகுதியில் சைவமதச் சார்பை அடிப்படையாகக் கொண்ட ஸ்தாபனங்களை நிறுவி; சைவப் பிள்ளைகளுக்குச் சமயக்கல்வி வசதி அளித்து, நூல்நிலையங்கள் மூலம் சைவநூல்களை வழங்கிப் பலவிதமான சைவ வளர்ச்சித் தொண்டைத் தனது லட்சியமாகக் கொண்ட வட கொழும்பு இந்து பரிபாலனச் சங்கத்தின் பன்னிரண்டாவது ஆண்டு நிறைவு அறிக்கையும், வரவு-செலவு ஐந்தொகைக் கணக்குகளும் இன்று காலை நடைபெறும் பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

இச்சங்கத்தால் 1965ம் வருடத்தில் நடாத்தப்பெற்ற சமயப் பாடசாலைகள், கூட்டு வழிபாடுகள், திருமுறை இசைவகுப்புகள், குருபூசைகள் முக்கிய விழாக்கள் ஆகியவற்றின் விபரம் இவ்வறிக்கையில் தரப்பட்டிருக்கிறது.

## 6 வருடங்களின் பின்னர் லாபம்

கொழும்பு, ஞாயிறு

இலங்கை எண்ணெய், கொழும்பு கூட்டுஸ்தாபனத்துக்கு 1964—65ம் ஆண்டில் முதற் தடவையாக லாபம் கிடைத்துள்ளது. 1958-ல் இக்கூட்டுஸ்தாபனம் செயல்பட ஆரம்பித்தது

---

## விளம்பரம்

### அறிவித்தல்

காலஞ்சென்ற டாக்டர் க. சி. சண்முகரத்தினம் அவர்களுடன் கொடுக்கல் வாங்கல் இருப்பவர்களும், வேறு ஏதேனும் தொடர்பு உள்ளவர்களும் தயவுசெய்து இத்திகதியிலிருந்து இரண்டு (2) கிழமைகளுக்குள் முழுவிபரங்களுடன் எனக்கு அறிவிக்கவும்.

ஆ. தனபாலசிங்கம்,
வழக்கறிஞர்,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

920

### வாடகைக்கு லொறிகள் தேவை

பண்டத்தரிப்புக் கோவிற்பற்றுப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தேவைக்கு வாரத்தில் இரு கட்கிழமைகளில் சங்கங்களுக்குச் சாமான்கள் ஏற்றுவதற்கும், புதன், வியாழக்கிழமைகளில் யாழ்ப்பாணத்திலிருந்து சமான்கள் ஏற்றிவருவதற்கும், இருமுறை கொழும்பு அல்லது கந்தளாயிலிருந்து சீனி ஏற்றிவருவதற்கும் லொறிகள் வாடகைக்குத் தேவைப்படுகின்றன,

விரும்புவோர் நேரிலாயினும், கடித மூலமாயினும் 25-8-66க்கு முன்பதாகத் தொடர்புகொள்ளவும்:

நீ. யேம்ஸ்
தலைவர், ப. கோ. ப. நோ.
கூ. ச. சமாசம்.

14-8-66 922


படித்துவிட்டீர்களா?
சி. சிவஞானசுந்தரம் எழுதிய

### "நெஞ்சில நிறைந்தவள்"

(சமூக நாவல்)

ஆசாடபூதிகளின் அநியாயம்-நாகரிகம் என்ற பெயரில் நிலவும் ஆபாசம்-இவற்றினிடையே ஊசலாடும் அபலைகளின் வாழ்வு-இத்தனையும் கொண்ட உள்ளத்தை உருக்கும் ஒரு சீர்திருத்தக் கதை தான்

"நெஞ்சில் நிறைந்தவள்"

இன்றே வாங்கிப் படியுங்கள்

விலை: 1-25


## சிறிமா

வத்தளை, ஞாயிறு

எதிர்க்கட்சித் தலைவரான திருமதி சிறிமா பண்டாரநாயக்கா பெலியகொடையில் புதிய சந்தையை இம்மாதம் 22ந் தேதி திறந்து வைப்பார்.

நான்கு லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட இந்த நவீன மார்க்கெட்டில் வாடிக்கையாளர் தமக்குத் தேவையான எந்தப் பொருட்களையும் வாங்கலாம்.

## "மூதூரில் பல்கலைக்கழகம்"

மூதூர், ஞாயிறு

இந்நாட்டில் முஸ்லிம்களின் கல்வியையும், கலாசாரத்தையும் வளர்க்க ஒரு முஸ்லிம் பல்கலைக்கழகம் தேவையென்னும் பிரேரணையொன்றைப் பாராளுமன்றத்தில் கொண்டுவருவதற்கு மூதூர் முதலாவது எம். பி ஜனாப் முகமதலி முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய ஐக்கியம்........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டேன். இந்த நேரத்தில் அவர் ஓய்வு பெறுவது மிகவும் கவலையாக இருக்கிறது.

கடைசியாக நான் இங்கே வந்தபொழுது புகையிரத நிலையங்களை நேரில் பார்வையிட்டு, திருத்தம் செய்யும்படி கூறினேன். அவர் திருத்தங்களை உடனடியாகவும் நன்றாகவும் செய்துள்ளார். கடந்த முறை நான் பார்வையிட்டுச் சென்ற புகையிரத நிலையங்கள், புதிய நிலையில் காட்சியளிக்கிறது. இது திரு. வைத்திலிங்கத்தின் கடமையுணர்ச்சியை எடுத்துக் காட்டுகிறது. இன்று எமது அரசாங்கத்திற்கு இவரைப் போன்ற கடமையுணர்ச்சி உள்ளவர்களே தேவைப்படுகிறது. சில கடமைகளைச் செய்வதற்காக அவர் மலேசியாவிற்குச் செல்லவிருக்கின்ருர். புதிய பிரதம என்ஜினியர் அவருடன் ஒன்ருகப் பழகி அவரின் வாரிசாகவே இருக்கின்ருர். மற்றும் புகையிரதப்பகுதி உத்தியோகத்தர்களும் அவரின் பாதையைப் பின்பற்றவேண்டும்.

திரு. வைத்திலிங்கம் எல்லோரையும் சாதி, மத, பேதமின்றி ஒரே மாதிரிப் பாவித்துவந்தார். எல்லோருடனும் இரக்கம் காட்டி, அன்புடன் பழகினுர். இவரின் உதவியினுல் தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்தர வேலை கொடுக்கலாமென கருதியுள்ளேன்.

## புதியபகுதி ஆரம்பமாகும்

புகையிரத இலாகாவில் அக்டோபர் 1-ந் தேதி முதல் ஒரு புதியபகுதி ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளோம். புதியபகுதி ஆரம்பிக்கும்போது அவர் இல்லாதது மிகவும் கவலையாக இருக்கின்றது.

புகையிரதப் பகுதியில்இப்போது துரிதவேலை நடைபெற்றுவருகிறது. புகையிரதப்பகுதி மந்திரி என்றமுறையில் நான் இது குறித்து பெருமையடைகிறேன். புகையிரப்பகுதி வேலைகள், மற்ற இலாகாக்களிலும் பார்க்க மிகவும் சீக்கிரமாக முடிவடைகிறது. இதைநான் பெருமைக்காகச் சொல்லவில்லை.

என்னைச் சந்தித்த சில எம்பிக்கள், மற்றும் இலாகாக்களின் கீழுள்ள கட்டடவேலைகளை, புகையிரதப்பகுதியின் கீழ் கொண்டு வந்துசீக்கிரம் செய்து தரும்படி கேட்டார்கள். இது வைத்திலிங்கத்திற்கு பெருமை தரும் விஷயம்.

மலேஷியா செல்லும் திரு வைத்திலிங்கம், பாரியாருடன் இந்நாட்டிற்கு வந்து உயர்பதவி ஏற்று சேவை செய்வார் எனநம்புகிறேன். எங்கிருந்தாலும்வாழ்க என வாழ்த்துகிறேன்.

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி-2-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
THE PURPLE MONSTERS STRIKE
(Republic Serial)

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
சிவாஜி - சாவித்திரி
நடித்த
கப்பலோட்டியதமிழன்

REGAL—JAFFNA
NOW SHOWING
NINE HOURS TO RAMA
(Last Houros of Mahatma Ghandi)
(Cinemascope - Color)

மகாத்மா தியேட்டர்
(கரவெட்டி)
எஸ். எஸ். ஆர்.
விஜயகுமாரி
முதலியோர் நடித்த
"பூமாலை"

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
சிவாஜி - சரோஜா தேவி
நடித்த
பாகப்பிரிவினை

வெள்ளி முதல்

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ண (திருமலை)

ரி. எம். சௌந்தரராஜன்
பி. எஸ். சரோஜா
எம். ஆர். ராதா, மனோகர்,
சாரதா, லட்சுமி, ராஜம்
மற்றும் பலர் நடித்த

அருணகிரிநாதர்

இசை: காவலுஞ்சென்ற ஜி. ராமநாதன், ரி. ஆர். பாப்பா
டைரக்ஷன்: ராமண்ணா.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் [illegible] மேன் [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 19[illegible] ஆகஸ்ட் மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

மாவிட்டபுரம்

## கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழா

மாவிட்டபுரம், ஞாயிறு

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவிலின் பஞ்சரதோற்சவம் இன்று நடைபெறுகிறது. இன்று நடைபெறும் தேர்த்திருவிழா நிகழ்ச்சிகளை இலங்கை வானெலி அஞ்சல் செய்யும்.

காலை 8 மணிமுதல் 10-30 மணிவரையும், மாலை 4-00 மணிமுதல் 6-00 மணிவரையும் வானெலியில் தேர் நிகழ்ச்சிகளின் வர்ணனையைக் கேட்கலாம். மாலை 5 மணிக்கு தேர் முட்டியில் தெப்பதிருவிழாவின்நோக்கத்தை விளக்கும் வகையில் அமைந்த 'காங்கேயன் வந்தான்' என்னும் சரித்திரத்தை தமிழ் மணி எஸ். கணேசசுந்தரன் குழுவினர் வில்லுப்பாட்டாக நிகழ்த்துவர்.

செவ்வாய்க்கிழமை ஆடி அமாவாசைத் தீர்த்தோற்சவம் கீரிமலையில் நடைபெறும். புதன்கிழமை மாம்பழத்திருவிழாவும், வியாழக்கிழமை சரித்திரப் பிரசித்தி பெற்ற கப்பல் திருவிழாவும் நடைபெறும்.

வேதாகம சைவசித்தாந்த சபையின் ஆதரவில் இன்று காலை 8-30 மணிக்கு ஸ்ரீ சண்முகப் பெருமான் இரதமேறியதும், சிவாசாரிய மூர்த்திகளாகிய பதின்மர் கோவில் கீழைச் சந்நிதியிலிருந்து வேதபாராயணத்துடன் திருவீதி பிரதட்சணஞ் செய்து வழிபாடாற்றுவர். அதைத் தொடர்ந்து, இச் சபையைச்சேர்ந்த சிவபூஜா துரந்தரர் தலைமையில்தமிழ் வேதகானத்துடன் பஜனை நடைபெறும்.

புகையிரத நிலைய வாயில், நுங்குகளாலும், இளநீர்குலைகளாலும் மலர்களாலும் மின்சார தீபங்களாலும் அலங்கரிக்கப்பட்டு, மார்ட்டின்வீதி சந்திவரை இருகரையிலும் சோடிக்கப்பட்டிருந்தது.

சந்தியிலிருந்து திரு.வைத்திலிங்கமும். பாரியாரும் மேளவாத்திய ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர். சிங்கள-தமிழ் தொழிலாளர்கள் பூமாரி பொழிந்த வண்ணம் ஊர்வலத்தின் முன் சென்ருர்கள். அடிக்கடி வெடியோசைகள்கேட்டன.

### தங்கத்தில் மாதிரி ரயில் நிலயம் அன்பளிப்பு

யாழ்ப்பாணத்தின்உத்தம புத்திரன் எனப் பாராட்டப்பட்ட திரு. வைத்திலிங்கத்திற்கு 40தங்கப்பவுண்நிறையுள்ள யாழ். புகையிரத நிலயம்மாதிரி உருவத்தை தொழிலாளர் சார்பில், மந்திரு ஹுருள்ள அன்பளித்தார். தொழிலாளர் சார்பில் வரவேற்பு பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது.

புகையிரத பகுதியைச் சேர்ந்த திரு. இரத்தினசிங்கம் வரவேற்றுப் பேசும்போது கூறியதாவது:- திரு. வைத்திலிங்கம் 24 வருடகாலம் நம் மத்தியில் பணியாற்றியுள்ளார். புகையிரதப்பகுதியில்எங்கு திருத்தம் செய்யவேண்டியிருந்தாலும் அது முக்கியமாகப்பட்டால் பணம் இருந்தாலும்சரி, இல்லாவிட்டாலும்சரி அவர் அந்த வேலையைச்செய்துவிடுவார். வெள்ளத்தாலும் புயல்காற்றினுலும் சேதமடைந்த நிலையங்களை சீக்கிரமே செய்துமுடித்தார்அவர்.

அநுராதபுரம், கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில், அந்தந்த இடத்திற் [illegible] நாகரிகத் [illegible] புகையிரத [illegible] கட்டித்தந்தார்.

இரத்தினபுரியில்

## ரூ 10 லட்சம் பெறுமதியான பொருள்கள் கைப்பற்றப்பட்டன
### வருமானவரி இலாகாவினர் நடத்திய திடீர் வேட்டை

கொழும்பு, ஞாயிறு

இந்த வருடத்தில் வருமானவரி இலாகாவினர் இரத்தினபுரியில் நடத்திய திடீர் வேட்டையில் 10 லட்சம் ரூபாவுக்கு மேல் பெறுமதியான ரொக்கப்பணமும் விலை உயர்ந்த கற்களும் கைப்பற்றினர்.

வருமானவரி இலாகா இவ்வித வேட்டை நடத்தியது இதுவே முதற் தடவையாகும்.

இலங்கையிலிருந்து ஹாங்ஹாங்குக்கும் அமெரிக்காவுக்கும் விலை உயர்ந்த கற்கள் சமீபகாலத்தில் கள்ளக்கடத்தல் செய்யப்பட்டுவருவதாக கிடைத்த தகவலைத் தொடர்ந்தே இவ்வித திடீர் வேட்டை நடத்தப்படுகிறது.

இவ்வித திடீர் வேட்டை இன்னமும் தொடர்ந்து நடைபெறுமென அறியப்படுகிறது.

## வகுப்புவாத ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பேன்.

ஜனநாயகம் என்பது மக்களுக்குஅளிக்கப்படும்பூரண சுதந்திரமாகும். இலங்கையைப் போன்ற பல இனத்தவர்கள் வாழும் ஒருநாட்டில ஒவ்வொரு சமூகத்தவரும் வாழவேண்டுமென்பதே அதன் முக்கியமாகும்.

இந்த எண்ணம் இலங்கை இனத்தவர்களின் மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டதென்பது குறித்து பெருமகிழ்ச்சியடைகின்றேன். போரா சமூகத்தினர் இந்த நாட்டில் மிகவும் சிறுபான்மை இனமாக இருந்தபோதிலும் நாட்டின் அபிவிருத்துகளுக்காக அவர்கள் அளிக்கும் உற்சாகத்துக்காக அவர்களைப்பெரிதும்பாராட்டுகிறேன்.

போரா சமூகத்தினர் கொழும்பு பொது வாசிகசாலைக்கு 5 லட்சம் ரூபா அன்பளிப்பு வழங்கியது குறித்து நான் நன்றிசெலுத்துகிறேன்.

உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் பேசுகையில் இந்த நாட்டில் வாழும் சகல இனமக்களும் சம உரிமையுடன் வாழவேண்டுமென்ருல் மத சுதந்திரமும், சமூகங்களிடையே சௌஜன்யமும் நிலவவேண்டுமென்று கூறினுர்.

### கடமையுணர்ச்சி மிக்கவர்

பிரதம செயலாளர் திரு. செனரத்ன பேசும்போது கூறியதாவது:—

கடந்தமாதம் கொழும்பில் திரு. வைத்திலிங்கத்திற்கு ஒரு விருந்துஅளிக்கப்பட்டது. நாவலப்பிட்டி, நானுஓயா, அநுரதபுரம் ஆகிய இடங்களிலும் பிரியாவிடை விருந்து அளிக்கப்பட்டது. இது மக்களுக்கு அவர்மீதுள்ள நல்லெண்ணத்திற்கும் சான்ருகும். சாதி மத வேற்றுமை பாராது எல்லோருடனும் அன்பாகப் பழகினுர். அரசாங்கத்திற்கு விஸ்வாசமுடனும், கடமையுணர்ச்சியுடனும் பணியாற்றிவந்தார். ஒவ்வொரு அரசாங்கமும் இப்படியானவர்களின் சேவையைத்தான் எதிர்பார்க்கிறது.

திரு. வைத்திலிங்கம் தனக்களிக்கப்பட்ட பாராட்டுகளுக்கு நன்றி தெரிவித்துப் பேசினுர்.

பல கலை நிகழ்ச்சிகளும், வாண வேடிக்கையும்இடம் பெற்றன.

## இங்கிலாந்துக்கு தங்கப்பதக்கம்

கிங்ஸ்டன், ஆக. 14

கடந்த ஒன்பது நாட்களாக நடைபெற்று நேற்றுடன் முடிவடைந்த காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் இங்கிலாந்துக்கு 33 தங்கப்பதக்கங்கள் கிடைத்திருக்கின்றன.

ஆஸ்திரேலியாவுக்கு 23 தங்கப்பதக்கங்களும் கனடாவுக்கு 14 தங்கப்பதக்கங்களும் நியுஸிலாந்துக்கு 08 தங்கப்பதக்கங்களும் கானவுக்கு 05 தங்கப்பதக்கங்களும் கிடைத்திருக்கின்றன.

டிரினிடாட்-04, பாகிஸ்தான்-04, நைஜீரியா-03, இந்தியா-03, மலேசியா-02. ஸ்கொட்லாந்து, வடக்கு அயர்லந்து ஆகியன தலா ஒவ்வொரு தங்கப்பதக்கம் பெற்றிருக்கின்றன.

இந்த விளையாட்டுப் போட்டிகளில் கென்யாவைச் சேர்ந்த கைனே என்பவர் ஒரு மைல் ஓட்டப் போட்டியில் உலக சாதனையை நிலைநாட்டியுள்ளார். ஒரு மைல் தூரத்தை இவர் 3 நிமிடம் 55.3 வினுடிகள் நேரத்தில் கடந்து முடித்தார். ஏற்கனவே இவர் மூன்று மைல் ஓட்டப் போட்டியிலும் உலக சாதனையை ஏற்படுத்தியுள்ளார்.

## நியமனம்

கொழும்பு, ஞாயிறு

உள்நாட்டு அமைச்சின் பாராளுமன்றக் காரியதரிசி திரு. எஸ். டி. எஸ். ஜயசிங்கா, தொழில் வேலைவாய்ப்பு, வீடமைப்பு அமைச்சின் பாராளுமன்றக் காரியதரிசியாக நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய உள்நாட்டு அமைச்சின் பாராளுமன்றக் காரியதரிசியாக யார் நியமிக்கப்படுவார் என்பது இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

## காணவில்லை

சுன்னுகம் புகையிரத நிலையத்திற்கு வெளியால் ஒரு "அற்றாச் பாய்க்" கந்தோருக்குரிய கடதாசிகளும் ஒரு டயறியும் தவறிவிட்டது. இதைக்கண்டெடுப்பவர்கள் எஸ். சிவசுப்பிரமணியம் 'மணிமன்றம்' ஏழாலை மேற்கு சுன்னுகம் அல்லது உப்பள அதிபர் அம்பாந்தோட்டை எனும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 851

## மரண அறிவித்தல்
### கபிலாயர் செல்லையா

உடும்பராய் கற்பகப்பிள்ளையார் கோவில் தர்மகர்த்தாவும் (மனேச்சர்), மலாயன் பென்சனருமாகிய கபிலாயர் செல்லையா நேற்று (14-8-66) சிவபதமடைந்துவிட்டார். அன்னுருடைய பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக இன்று திங்கள் பகல் 12மணியளவில் இழவிகாட்டு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். அறிவிப்பவர்: சி. செல்லப்பா, உரும்பராய் கிழக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org